Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 02 வெள்ளிக்கிழமை (14.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 136

## வடக்கின் அபிவிருத்தியில் நோர்வே அரசு கரிசனை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்புச் செய்வதற்கு நோர்வே அரசு ஆர்வமாக இருப்பதாக தெரியவருகிறது.

யாழ். அரச அதிபருக்கும் நோர்வே. தூதுவருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களின்போது இந்தத் தகவல் வெளியாகியது.

இச்சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தில் யுத்தத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல் துறைசார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. அத்துடன் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அலசி ஆராயப்பட்டிருக்கிறது.

அத்துடன் வலி. வடக்கில் மேற்கொள்ளப்படும் மீள்குடியமர்வு மற்றும் மாவட்டத்தின் தற்போதைய வறட்சி நிலைவரம் குறித்தும் நோர்வேத் தூதுவர் தம்முடன் கலந்துரையாடியதாகவும் யாழ். அரச அதிபர் சுந்தரம்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிவராத்திரிக்கு மறுநாள் பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

சிவராத்திரி தினத்திற்கு மறுநாளான எதிர்வரும் 28 ஆம் திகதி தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கி அத்தினத்திற்கு பதிலாக மார்ச் 8 ஆம் திகதியை பாடசாலை தினமாக அறிவிப்பதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக இந்து ஆலய பாதுகாப்பு பேரவை அறிவித்துள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின்

19 ஆம் பக்கம் பார்க்க


## இந்திய மீனவர் அத்துமீறல் மீண்டும் வடக்கு கடலில்

### 29 பேர் கடற்படையால் கைது

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு மற்றுமொரு தொகுதி இந்திய மீன்பிடிப் படகுகள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 7 ரோலர் படகுகளில் இவ்வாறு மீன்பிடித்துக் கொண்டிருந்த 29 இந்திய மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதுடன், இவர்கள் நேற்று யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குறித்த தரவுகள் யாழ். கடற்றொழில் நீரியல் வளத திணைக்களத்தினால் பெறப்பட்டதனைத் தொடர்ந்து இவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு இவர்களுக்கெதிராக வழக்குப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)



11

பிரியமான வர்களுக்கு...

# 13 ஐ தாண்டிய தீர்வுக்கு அழுத்தம் கொடுக்காது டில்லி

### இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சுஜாத்தா சிங் தெரிவிப்பு



(புதுடில்லி)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டுவதற்காக ஏற்கனவே உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது அரசியல் அமைப்பின் திருத்தத்தையும் தாண்டிய வகையில் ஒரு தீர்வுக்காக இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகிக்கும் நோக்கம் புதுடில்லிக்கு கிடையாது என்று இந்திய வெளிவிவகார செயலர் சுஜாத்தா சிங் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை ஆராய்ந்த பின்னரே அது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு வெளியிடப்படும் எனவும் இந்திய வெளிவிவகார செயலர் சுஜாத்தா சிங் தெரிவித்துள்ளார்.

டில்லியில்

19 ஆம் பக்கம் பார்க்க



14

தீர்மானம்

## ரயில் மோதி ஒருவர் பலி; குருமன்காட்டில் சம்பவம்

(வவுனியா)

கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த நகர்சேர் கடுகதி ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். வவுனியா குருமன்காடுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் குருமன்காடுப் பகுதியைச் சேர்ந்த 55 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சட்டம் ஒழுங்கை வலுப்படுத்த யாழ். குடாவில் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நிகழும் சமூக சீர்கேடுகள் சட்டம் ஒழுங்கு மீறல்கள் எந்த உயர்மட்டத்தில் நிகழ்ந்தாலும் சட்டம் தமது கடமையை சரிவரச் செய்யும் என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட முன்னாள் நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் தானியல் றெகஷியனின் (றஜீவ்) உறவினர்களுக்கு தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடும் நபர்களை இனம்கண்டு சட்ட நடவடிக்கையெடுக்குமாறு வலியுறுத்தியதுடன் சட்டவிரோதமாக டைனமேற் பாவித்து மீன்பிடித்தொழிலில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்

19 ஆம் பக்கம் பார்க்க

## நூல்நிலைய உத்தியோகத்தர்மீது நகரசபை உறுப்பினர் தாக்குதல்

### சாவகச்சேரி நகரசபையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஆளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ஒருவரால் நூலக உத்தியோகத்தர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த உத்தியோகத்தரான சாவகச்சேரி, கச்சாய், உப்புக்கேணியைச் சேர்ந்த இளையதம்பி சிவானந்தம் கடமையிலிருந்த சமயம் அங்கு போதையில் வந்ததாகக் கூறப்படும் சாவகச்சேரி நகரசபையின் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஞானப்பிரகாசம் கிசோர் என்பவரே அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் நூலகராகக் கடமையாற்றும் உத்தியோகத்தரிடம், நீ எப்போது பென்சன் எடுக்கப் போகிறாய்? என கூட்டமைப்பு உறுப்பினர் வினாவியுள்ளார். அதற்கு உத்தியோகத்தர் எனக்கு பென்சன் எடுப்பதற்கு இன்னும் நான்கு வருடங்கள் உள்ளது எனக் கூறியுள்ளார்.

அப்போது ஆளும் கூட்டமைப்பு உறுப்பினரான கிசோர், இல்லை நீ ஒழுங்காக வேலை செய்வதில்லை நீ பென்சன் எடு என தகராறு செய்துள்ளார். இதனபோது இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அச்சமயம் கடமையிலிருந்த உத்தியோகத்தரை,

19 ஆம் பக்கம் பார்க்க

## “ஆவா” குழு தலைவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவின் தலைவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேற்படி குழுவைச் சேர்ந்த இருவரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான

19 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் அலுவலர் மீது மல்லாகத்தில் தாக்குதல்

### தாக்கியவர்கள் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

ஓட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ உத்தியோகத்தரான யாழ். மல்லாகத்தைச் சேர்ந்த எஸ்.சந்திரசேகரன் (வயது - 23) மீது இனம்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் குறித்த பொலிஸார் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக குறித்த பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், அவரை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறும் அறிவுறுத்தியதாக சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் தனது வீட்டிற்கு அருகாமையிலிருக்கும் கடையொன்றில் தனது நண்பர்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண விவசாய அமைச்சு கிளிநொச்சியில் அமைவதே பொருத்தம்

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன்




வடக்கு மாகாண விவசாய அமைச்சின் தலைமையகம் கிளிநொச்சியில் அமைவதே பொருத்தமானது என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய பெருங்குடி மக்கள் யாழ்.மாவட்டத்திற்கு வெளியிலேயே அதிகமாக வசித்து வருகின்ற அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலேயே பாரிய விவசாயக் குளங்கள் உட்பட பல முக்கிய நீர்ப்பாசனக் குளங்களான இரணைமடுக்குளம், அக்கராயன் குளம், வன்னேரிக் குளம், புதுமுறிப்புக்குளம், கல்மடுக்குளம் பிரமந்தனாறுக்குளம் உட்பட பல குளங்களும் பரந்த நெற் செய்கை நிலங்களும் மேட்டுப்பயிர்ச்செய்கை நிலங்களும் காணப்படுவதோடு. கிளிநொச்சி மாவட்டம் விவசாயத்தின் கேந்திரத்தளம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாய பீடமும் கிளிநொச்சியில் அமையப் பெற்றிருக்கின்றது. எனவே வடக்கு மாகாண விவசாய அமைச்சின் தலைமையகத்தை கிளிநொச்சியில் அமைப்பதே சாலப் பொருத்தமானது.

இது தொடர்பாக மாகாண சபையில் ஆற்றிய கன்னி உரையிலும் சுட்டிக்காட்டியுள்ளேன். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 58 விவசாயிகளுக்கு உலக உணவு விவசாயதாபனத்தின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 54 வரையான நீர் இறைக்கும் இயந்திரங்கள் அரைமானிய அடிப்படையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் கலந்துகொண்டிருந்தார். அத்தோடு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் பசுபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கினர். இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் செல்வராசா, பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன் ஆகியோரும் விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகளும் விவசாயிகளும் கலந்துகொண்டனர்.


## சிறு விளம்பரம்

### குரு சாத்திரம்

ஆண் குழந்தை வேண்டுமா? பெண் குழந்தை வேண்டுமா? நீங்கள் விரும்பும் குழந்தைச் செல்வத்தை பெற்றெடுத்துக் கொள்வதற்கு எம்மிடம் குடும்பத்துடனும் இருவரின் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0778019323. (C/3345)


# நீதிமன்ற வளாகத்தில் சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தினுள் சைக்கிள் திருட்டுச் சம்பவம் ஒன்று கடந்த வாரம் அரங்கேறியுள்ளது.

மருமகனை பிணை எடுக்கச் சென்ற மாமனாரின் சைக்கிளே இவ்வாறு பறிபோயுள்ளது.

சம்பவ தினத்தன்று நீதிமன்ற வளாகத்தினுள் சைக்கிளை நிறுத்தி விட்டு சென்ற மாமனார் மருமகனை பிணை எடுத்துக் கொண்டு வந்தபோது சைக்கிள் மாயமானதைக் கண்டு அதிர்ந்ததுடன், இது குறித்து நீதிமன்ற அதிகாரிகள், பொலிஸாரிடம் முறையிட்டு விட்டு பிறரின் உதவியுடன் வீடு திரும்பியுள்ளார். சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பஸ்தரே இவ்வாறு நீதிமன்றத்தில் சைக்கிளை பறிகொடுத்துள்ளார். (இ)

## சமய விழுமிய நாடகப் போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் சமய விழுமிய நாடகப் போட்டி நாளை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியாளர்களை குறித்த நேரத்துக்கு அழைத்து வருமாறு பொறுப்பாசிரியர்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (11)

# யாழில் 27 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச புகைப்படக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் 16 ஆவது சர்வதேச புகைப்படக்கண்காட்சி 22ஆம், 23ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலக ஏற்பாட்டில் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. 27 நாடுகளின் 18 புகைப்படக்கலைஞர்களின் பிரசித்தமான புகைப் படங்கள் காட்சிப்படுதப்படுகின்றன.

முதல் நாள் பாடசாலை மாணவர்களுக்கான புகைப்படப் பிடிப்பு தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெறுவதுடன் மறுநாள் 23 ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கான மற்றும் தனியார் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கான கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

தேசிய புகைப்படச் சங்கம் இதனை ஒழுங்குபடுத்தியுள்ளது என நேற்று யாழ்.நூலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

புகைப்படக் கலையை வளர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இக்கண்காட்சி பல தரப்பினருக்கும் பயனுள்ளதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் நாளை காலை 8.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (எஸ்.பி)

## தொழிற் பயிற்சி

(சாவகச்சேரி)

கைதடி, நுணாவில் அறவெளிப் போராட்டக் குழுவினரின் நடப்பாண்டுக்கான தொழிற் பயிற்சி நாளை காலை 10.00 மணிக்கு பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு வி.கே.பாலநாதன் அறிவித்துள்ளார். (11)

## மாசிமக உற்சவம்

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு, ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மாசிமகம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு பூசைகள் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 9.00 மணிக்கு சமயப் பேச்சு, 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும்.

11.00 மணிக்கு ஸ்ரீமத் நாராயண சுவாமி பூமாதேவி ஸ்ரீதேவி சகிதம் அலங்காரத் தண்டிகையில் எழுந்தருளி வீதியுலா வருவார்.

மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வரப் பூசை நடைபெறும். (68)

## லூர்த்து அன்னை திருநாள்

(குருநகர்)

யாத்திரைத் தலமான சிறுத் தீவு புனித லூர்த்து அன்னை வணக்க பீட (ஹெவி) திருநாள் நாளை மறுதினம் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வணக்க பீடத்தை குருநகரைச் சேர்ந்த பஞ்சம் சம்மாட்டி ஞாபகார்த்தமாக அவரது மூத்தமகன் பேக்மன் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புனரமைத்து வழங்கியுள்ளார்.

கடந்த கால அனர்த்தங்களால் வணக்கபீடம் சேதமடைந்த நிலையில் கடந்த வருட திருநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாளை மறுதினம் பிற்பகல் 4.30 மணிக்கு செபமாலையுடன் ஆராதனைகள் குருநகர் யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு றோமான் நேசராசா தலைமையில் ஆரம்பமாகி கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து புனித லூர்த்து அன்னையின் திருச்சொரூப பவனி நடைபெற்று அன்னையின் சொரூப ஆசீர்வழங்கலுடன் திருநாள் வைபங்கள் நிறைவடையும். (68)

# திருநாள் திருவிழா

(முல்லைத்தீவு)

நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி ஆலய கொடியேற்றத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் 11 ஆம் திகதி திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாதா திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது.

ஆலய பங்குத்தந்தை மயூரன் தலைமையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், இதில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (09)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2504 திகதி 12-02-2014

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள்: 30 32 36 42

போனஸ் இல: 39

ஜக்பொட் பரிசு ரூ.15,609,475/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 260764 | 20/- | 5,215,280/- |
| 2 இல | 18615 | 100/- | 1,861,500/- |
| 3 இல | 377 | 1,000/- | 377,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10448 | 40/- | 417,920/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 767 | 1,000/- | 767,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 17 | 10,000/- | 170,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,609,475/- | - |
| 1 இல + போனஸ் இல | 12410 | 100/- | 1,241,000/- |
| 2 இல + போனஸ் இல | 612 | 500/- | 306,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 506 | 200/- | 101,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 304539 | | 13,177,900/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.02.15 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,322,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3340)

# கருவளம் குறைந்து செல்வதனால்

# மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு



வாழ்க்கை வசதிகளையும் பிள்ளைப்பேற்றையும் நாம் ஒன்றாக இணைப்பதனால் இலங்கையில் மக்களின் கருவளம் குறைந்து கொண்டே செல்கின்றது. இதனால் பாடசாலையில் இணையும் பிள்ளைகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சிப் போக்கே காணப்படுவதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய உள்ளக அரங்க திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தக் காலத்தில் ஒரு குடும்பத்தில் 6 - 7 பிள்ளைகள் இருப்பார்கள். ஆனால் தற்காலத்தில் வாழ்க்கை வசதி என்ற போர்வையில் 2 அல்லது 3 பிள்ளைகள் தான் பெருமளவான குடும்பங்களில் இருக்கிறார்கள்.

இதனால் பாடசாலையில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டு வருகின்றது. அதிலும் பெரும்பாலான பிள்ளைகளை பிரபல்யமான பாடசாலையில் பெற்றோர் இணைக்கின்றனர். இதனால் கிராமப்புறப் பாட-சாலைகளில் அதிக வசதி வாய்ப்புக்கள் இருந்தும் கற்க மாணவர்கள் இல்லை. இது வேதனையான விடயம்.

பெற்றோர் இது விடயத்தில் உணர்ந்து செயற்பட வேண்டும் பிரபல்யமான பாடசாலையில் பிள்ளை கற்பது பெற்றோருக்கு பெருமைதான் ஆனாலும் அவ்வாறான தூர இடங்களுக்கு பிள்ளைகளை அனுப்புவதால் பிள்ளையின் ஆரோக்கியம், இயற்கையான வளர்ச்சி என்பன பாதிக்கப் படுகின்றது.

கிராமப்புறப் பாடசாலைகளிலும் திறமையான ஆசிரியர்கள், வசதிகள் என்பன இருந்தும் பெற்றோர் இதனை ஏற்க மறுக்கின்றனர். இதனால் பாடசாலையின் தரம் குறைவடைகின்றது.

இதனை அனைவரும் உணரவேண்டும். பிள்ளைகளின் நலனைக் கருத்தில் கொண்டு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை இணைத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நீங்கள் இலகுவான முறைமையை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் பிள்ளைகளின் கல்வித்தரம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை என்றார்.

இக்கட்டடத்திறப்பு விழா பாடசாலை அதிபர் வே.கந்தசாமி தலைமையில் இடம் பெற்றது. இதில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டார்.

இதன்போது கட்டட ஒப்பந்ததாரர் சி.இராமச்சந்திரன் தம்பதிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டதுடன் நிகழ்விற்கு தேசமான்ய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். (இ,103)

# வேலணை பிரதேச செயலகத்தின்

# பகிரங்க ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலக பகிரங்க ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய தலைமை ஆசிரியரும் சங்கத்தலைவருமான பொ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேசசெயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவரும், யாழ்ப்பாண பிரதேச செயலக மத்தியஸ்தர் சபையின் தலைவருமான வி.ஸ்ரீசக்திவேல் (ஜே.பி)வேலணை பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், நல்லூர் பிரதேசசெயலக ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் (சந்திரன்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த வருடாந்த கூட்டத்தில் 2014ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளதால் வேலணைப்பிரிவு அனைத்து ஓய்வூதியர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் செ.சிவலோகநாதன் அறிவித்துள்ளார். (05)

# திருடர்களின் சாதுரியம்

# பட்டப்பகலில் 2 சைக்கிள்கள் திருட்டு

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு சைக்கிள்கள் திருடர்களால் மிகச்சாதுரியமாக பூட்டு உடைக்கப்பட்டு திருடிச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த செவ்வாய்க்கிழமையன்று குறித்த சைக்கிள் உரிமையாளர்கள் பாடசாலை அருகில் உள்ள வீட்டில் விட்டுச் சென்றுள்ளனர். இதனை அவதானித்திருந்த திருடர்கள் சைக்கிளின் பூட்டை உடைத்துக் கொண்டு திரு-டிச் சென்றுள்ளனர்.

எனினும் வீட்டு உரிமையாளர்கள் சைக்கிளை விட்டுச் சென்றவர்களே இவ்வாறு சைக்கிளைக் கொண்டு செல்கின்றனர் என அதைப் பொருட்படுத்தாது இருந் துள்ளனர்.

பின்பு சைக்கிளை விட்டுச் சென்றவர்கள் வந்து சைக்கிளைக் காணாது தேடிய போதுதான் சைக்கிள் திருட்டுப் போன சம்பவம் தெரிய வந்தது. எனினும் இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எவரும் இதுவரை அடையாளங்காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# பாலைப்பாணி கிராம வீதியை

# செப்பனிடுமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலைப்பாணி கிராமத்திற்கான 11.05 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியினை புனரமைத்துத் தருமாறு இவ்வீதியை பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வன்னிவிளாங்குளம் சந்தியில் இருந்து 11.05 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாலைப்பாணி கிராமத்திலும் அதற்கு அடுத்த படியாகவுள்ள கொம்புவைத்தகுளம் கிராமத்திலும் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் குறித்த வீதி புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

அத்துடன் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதியூடாக பயணிக்க முடியாத அவல நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன் இக்கிராமங்களிலுள்ள உயர்தர மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளுக்காக வேறு பாடசாலைகளுக்குச் செல்வதற்கு குறித்த வீதியைப் பயன்டுத்த வேண்டியுள்ளது எனவே மக்களின் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# எல்லாரும் ஏறிவிழுந்த கழுதையில் இப்ப இவரும்....




'இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றால் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் வேண்டும்' என்று வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொல்லியிருக்கிறாரே என்று நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிருக்கிறது' என்றார் நண்பர்.

'யோவ், வேதாளம் எப்பதான் முருங்கையை விட்டு இறங்கியது?' என்று கேட்டார் அருகில் நின்றவர்.

'முதலில் அவர் முதலமைச்சராகத் தன்னைக் கருதிக் கொள்கிறாரா? அல்லது ஆன்மீகவாதியாக இருக்கிறாரா? அல்லது பிரதம நீதியரசராக எண்ணிக் கொண்டிருக்கிறாரா? என்று தெரியாமல் இருக்கு' என்று மீண்டும் சொன்னார் நண்பர்.

எனக்குக் குழப்பமாக இருந்தது.

முதலில் முதல்வர் சொன்னபடி 'மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தைப் பற்றிப் பார்ப்போம்.

முதல்வர் மூன்றாம் தரப்பாக யாரைச் சொல்கிறார்? அதாவது முதல்வர் கூறும் மூன்றாம் தரப்பு எது?

இந்தியாவா? மேற்குலகமா? மேற்குலகம் என்றால் எந்த நாடு அல்லது எந்தெந்த நாடுகள்? அல்லது வேறு ஏதாவது அமைப்புகளா? என்றால் அந்த அமைப்புகள் எவை?

இப்படித்தான் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை முன்னரும் புலிகள் உட்படப் பலரும் கேட்டனர். பிறகு இதே தரப்பு தங்களை ஏமாற்றி விட்டது என்று கைவிட்டனர்.

அதாவது 'இந்தப் பழம் புளிக்கும்' என்று முகம் சுழித்தனர்.

தொடக்கத்தில் இந்தியா மூன்றாம் தரப்பாக மத்தியஸ்தம் வகித்தது. அப்பொழுது தமிழ் மக்களின் சந்தோசத்தை அளவிட முடியாது. குண்டியில் தட்டின புளுகம் என்பார்களே, அந்த மாதிரிச் சந்தோசப்பட்டது தமிழ்க்குடி.

(இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்களத்தரப்பும் இலங்கை அரசும் இந்தியாவைக் கோவித்தது. போதாக்குறைக்கு இலங்கை – இந்திய உடன்படிக்கையின் முக்கிய சூத்திரதாரியாக இருந்த ராஜீவ் காந்தியைத் துப்பாக்கியால் தாக்கினார் ஒரு சிங்களச் சிப்பாய்).

பிறகு அதே இந்தியா கஞ்சிப் பானைக்குள்ளே நஞ்சை ஊற்றிப் போட்டுது என்று திட்டித்தீர்த்தனர் தமிழர்கள்.

போதாக்குறைக்கு ராஜீவ் காந்தியின் தலையையே கொய்து வீசி ஒரு வரலாற்றுப் பழி முடிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு, மேற்குலக மத்தியஸ்தம் இனித்தது. குறிப்பாக நோர்வே என்றால் வாயில் அவலும் சர்க்கரையும் நிறைந்தது.

(இந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்களத்தரப்பும் இலங்கை அரசும் நோர்வேயைப் பார்த்து முகம் சுழித்தன. மத்தியஸ்தத்தில் முக்கிய பாத்திரம் வகித்த எரிக் சோல்கெய்மின் கொடும்பாவி எரிக்கப்பட்டது).

இறுதியில் இந்தப் பழமும் புளித்தது,

ஆனாலும் இந்தச் சர்வதேச அனுசரணை, மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் என்ற விசர் தீரவில்லை.

கொஞ்சக் காலம் இந்த விசர் பிடித்து அலைந்தார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இப்ப எல்லாரும் ஏறிவிழுந்த கழுதையில் விக்கினேஸ்வரனும் சவாரி செய்ய விரும்புகிறார்.

என்ன செய்வது? ஆசை யாரைத்தான் விட்டது?

மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தம் என்று சொல்லி, பேச்சுவார்த்தைகள் ஏதாவது நடந்தால் ஒரு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஓசியில் உலகம் சுற்றலாம். பேரும் புகழும் ஓங்கும். அடுத்த தேர்தல்வரை சும்மாவே காலத்தைக் கழித்து விடலாம்.

விக்கினேஸ்வரன், முதல்வர் என்பதை விட, ஆன்மீகவாதி என்பதை விட, பிரதம நீதியரசர் என்பதை விட ஒரு தந்திரசாலி என்றே. தெரிகிறது.

என்ன செய்வது, பன்றியுடன் கூடிய பசுவும் மலம் தின்னும் என்று சும்மாவா சொன்னார்கள்.

நல்லாய்த்தான் இருக்கு, விக்கினமெல்லாம் தீர்ப்பான் விக்கினேஸ்வரன் என்று சொன்ன கதையெல்லாம்.

தமிழர்கள் தங்களுக்கான தலைமைகளை எப்படித்தான் இப்படியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்களோ!

சத்தியமாகத் தமிழர்கள் இன்னும் முருங்கையில்தான்.

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும். - சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கொடுமையான உலகிலிருந்து தப்பிக்க...

காதலர் தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மற்றெல்லா உணர்ச்சிகளை விடவும் உணர்ச்சிபூர்வமான கொண்டாட்டம் இதில் மிகையாக இருப்பது யோசிக்க வைக்கிறது. காதல் நாயைக் கூட எதுகை மோனையுடன் குரைக்கச் செய்துவிடுகிறது என்று ஒரு ஆங்கிலப் பழமொழி கூறுகிறது.

கவிதை எழுதத் தொடங்குகிறவர்கள் எல்லோருமே காதலில்தான் ஆரம்பிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. காதல் மனிதனை இவ்வளவு அல்லாட வைப்பதற்கு அவனது மனம்தான் காரணம் என்றால், மனித இனம் காலாகாலமாக கேட்டும் அறிந்தும் வந்த விஷயங்களால் உருவானதுதான் இந்தக் காதல் உணர்வாக இருக்க வேண்டும்.

காதல் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தன்மைதான். காதலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கா விட்டால் யாரும் காதல் வயப்பட்டிருக்க மாட்டார்கள் என்கிறார் ரோச்பௌகால்ட் என்பவர். அதாவது இலக்கியங்கள் மற்றும் புனைவுகளால் அது தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மாறாக, காதல் நமது உடலிலிருந்து தோற்றம் பெறுகிறது என்றால், அதாவது ஓமோன்கள் மற்றும் உடலின் சுரப்புகளால் அந்த உணர்ச்சி தூண்டப்படுகிறது என்றால் அது காமத்தின் ஒரு வடிவமாக இருக்க வேண்டும்.

காதல் பற்றி ஈ.வெ.ரா.பெரியார் சொல்லியிருப்பதும் நம் கவனத்திற்குரியது. 1931 ஆம் ஆண்டு 'குடியரசு' இதழில் அவர் எழுதியது இது:

"காதலுக்கு ஏதேதோ கற்பனைகளை கற்பித்து ஆண் பெண்களுக்குள் புகுத்தி விட்டதால் ஆண் பெண்களும் தாங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி, எப்படிக் குழந்தைகள் தூங்குவது போல் வேஷம் போட்டு கண்களை மூடிக்கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக "தூங்கினால் கால் ஆடுமே" என்று சொன்னால் அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைக்கவேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ அதுபோலும், எப்படி பெண்கள் இப்படி இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பது போல் நடப்பதாய் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்றார்களோ அதுபோலும் உண்மையான காதல்களானால் இப்படி இருப்பார்களே என்று சொல்லிவிட்டால் அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்து விட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர்களும் தங்கள் காதலைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத வேஷத்தையெல்லாம் போடுகிறார்கள்.

ஆகவே ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை. அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அ∴றிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லை.

ஆனால் அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமேயொழிய மனதிற்குத் திருப்தியும், இன்பமும் இல்லாமல் அன்பும், ஆசையும், நட்பும் இருப்பதாய் காட்டுவதற்காக அல்ல."

காதலர் தினக் கொண்டாட்டங்கள் வேறு வேறு வர்த்தக நோக்கங்களுக்காக பெருப்பிக்கப்பட்டிருந்தாலும், மனிதனின் சந்தோஷத்திற்காக இருக்கும் காதலை கொண்டாடுவதில் தப்பில்லை.

காதல், இந்தக் கொடுமையான உலகிலிருந்து நம்மைத் தனிப்படுத்தி நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாக உணரப்படுவதால், அது கொண்டாடப்படுகிறது என்கிறார் டயன் அக்கர்மென். சரிதான்!

- ஆசிரியர்.

# போர்க்குற்ற நீதிமன்றிற்கு இலங்கையரை அழைக்க முடியாது

## ஜே.வி.பி.தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நெதர்லாந்தின் ஹேக் நகரில் இருக்கும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையர் எவரையும கொண்டு செல்ல முடியாது என ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுக் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்றத்தின் இணக்கப்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் இலங்கை அதில் கையெழுத்திடவில்லை என்பதால், அப்படியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியாது.

இதனால் ஜனாதிபதியை மாத்திரமல்ல சாதாரண இராணுவ வீரரையும் சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல இயலாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஒட்டுசுட்டான் உப பிரதேச சபையை தனியாக மாற்றக்கோரிக்கை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உபசபையாக இயங்குகின்ற ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தை தனிப் பிரதேச சபையாக மாற்றுமாறு மாகாண சபை உறுப்பினர் வி.கனகசுந்தரசுவாமியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கி சுமார் 968 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையினை இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் குறித்த சபையினை இரண்டு சபைகளாக பிரித்து பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திகளை பாரபட்சமின்றி மேற்கொள்ள வழி செய்ய வேண்டுமெனவும் ஒட்டுசுட்டான் பிரதேச மக்களால் மாகாண சபை உறுப்பினர் வி.கனகசுந்தரசுவாமியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கே)

# வரவு கைரேகை பதிவு இயந்திரம் பாடசாலைகளில் பொருத்த ஆலோசனை

(சாவகச்சேரி)

பாடசாலைகளில் வரவு கைரேகைப் பதிவு இயந்திரங்கள் பொருத்துவதற்கான ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் உள்ள அலுவலர்கள், ஆசிரியர்கள் வரவை உறுதிப்படுத்தவும், தாமதமான வரவு குறித்த தரவுகளை இலகுவாக கையாளும் வகையிலும் வரவு கைரேகைப் பதிவு இயந்திரங்களை பொருத்த பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் உரை நிகழ்த்துகையில் இக் கைரேகை இயந்திர நடைமுறை குறித்த ஆலோசனைகள் கிடைத்திருப்பதாகவும் இந்நடைமுறை குறித்து ஆராயப்படும் எனவும் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ,11)

# இளைஞர்களின் அட்டகாசம்; விசனமடையும் பொதுமக்கள்

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி மடத்தடிப் பகுதியின் உள் வீதிப் பகுதிகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதிப் பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இடத்தில் வீதிகளில் நிற்கும் இளைஞர்கள் வீதியால் பயணம் செய்யும் யுவதிகள் முதல் வயது வந்தவர்கள் வரை தகாதவார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி கிண்டலடிப்பதாகவும் இதனால் தமது அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன் மன உளைச்சலுக்கும் தாம் ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இளைஞர்கள் மது அருந்திய நிலையிலேயே இவ்வாறான செயல்களிலும் வீண்வம்புகளிலும் ஈடுபடுகின்றனர். எனவே இதனால் வீதிகளில் பயணம் செய்வோர் அச்சத்துடனேயே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இளைஞர்களின் இத்தகைய விரும்பத்தகாத செயல்களையும் நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# பயிர் அழிவுக்கான நட்டஈடு விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசங்களில் நெற்பயிர் அழிவுக்கான நட்டஈடு வழங்கும் விண்ணப்பங்கள் விவசாய அமைப்புக்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்வயல் விவசாய அமைப்பினால் இம்முறை காலபோக நெற் செய்கை மேற்கொண்டு மழையினால் பயிர் அழிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இவ்விண்ணப்பப்படிவங்களை பாதிக்கப்பட்ட விவசாயிகள் பூர்த்தி செய்து வழங்க முடியும் என கல்வயல் விவசாய அமைப்பின் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார். (இ)

# மருத்துவ ஆலோசனை

(வேலணை)

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு மருத்துவ ஆலோசனையும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இன்று காலை 9.00 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி தி.ஸ்ரீதரன் மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.


# கால்கோள் விழா

(வடமராட்சி)

திக்கம் மத்தி சனசமூக நிலைய திக்கம் பாலர் பாடசாலையின் கால்கோள்விழா இன்று காலை 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திக்கம் சித்தி விநாயகர் ஓய்வுநிலை அதிபர் திருமதி ஸ்ரீ வடிவாம்பிகை சிவராசா, சிறப்பு விருந்தினராக வடமராட்சி முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் சி.தில்லைநாதன் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் பூ.சஞ்சீவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

**"இந்தப் படத்தை எடுத்தது ஒரு சிங்களவர் என்பதால் தமிழர்கள் இதைச் சிங்களப்படம் என நிராகரிக்கிறார்கள், படம் தமிழில் எடுக்கப்பட்டதால் சிங்களவர்கள் தமிழ்ப் படமென நிராகரிக்கிறார்கள்" என்றார். அவர் அவ்வாறு சொல்லிச் சொன்ன வாய் மூடுவதற்கு முன்பே நான் இருக்கையிலிருந்து எழுந்துசென்று அசோக ஹந்தகமவின் கைகளைப் பற்றி முத்தமிட்டேன். மிகுந்த மனவெழுச்சியுடன் அப்போதிருந்தேன். இரண்டு மாதங்கள் கழித்து ஒரு சனிக்கிழமை மாலையில் இதே மனவெழுச்சியை லெனின் எம். சிவத்தின் 'ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்' திரைப்படம் மீண்டும் என்னில் கிளர்த்திற்று.**


அசோக ஹந்தகம

## ஷோபா சக்தி கட்டுரையிலிருந்து

# தூங்கும் பனிநீரே

தமிழ் சினிமாவைப் பார்ப்பது நேர விரயமே என எனக்கு நானே நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டாலும் அது நிறுத்திவிட முடியாத கெட்ட பழக்கமாகவே என்னைத் தொடர்கிறது. தமிழ்த் திரையெங்கும் குவிந்துகிடக்கும் வண்ண வண்ணப் பிரமாண்டக் குப்பைகளிடையே "தூங்கும் பனி நீரே" என்ற குடியானவனின் பாடலைப் போலவோ, கு.அழகிரி சாமியின் ஒரு சிறுகதையைப் போலவோ, பீரின் ஒரு நாவலைப் போலவோ, சீனத்துச் சினிமாவான "ரூகெதரை"ப் போலவோ எளிமையும் உண்மையும் அழகியலும் கொண்ட ஒரு தமிழ்ப்படத்தைக் கண்டெடுத்துவிட மாட்டேனா என்ற நப்பாசையே தொடர்ந்தும் என்னைத் தமிழ் சினிமாவைப் பார்க்க வைக்கிறது. இது பெரியார் சொன்னதுபோல மலத்தில் அரிசி பொறுக்கும் முயற்சிதான். பத்து வருடங்களிற்கு ஒருமுறை அப்படி ஓர் அரிசி கிடைத்தும் விடுகிறது. அண்மையில் எனக்கு இரண்டு நெல்மணிகள் கிடைத்தன.

"இனி அவன்" திரைப்படத்தை இயக்கியவரான அசோக ஹந்தகம ஒரு சிங்களவராக இருந்த போதும், திரைப்படம் தமிழ் மொழியில் தமிழ் நிலத்தையும் தமிழ் வாழ்வையும் பேசிய படம். போருக்குப் பின்னான தமிழர்களின் இருப்பையும் இன்மையையும் பேசிய படம். அரங்கில் திரைப் படம் தொடங்கியதிலிருந்து அது எனக்குக் கடுமையான கேள்விகளையும் சந்தேகங்களையும் அரசியல்ரீதியாக எழுப்பிக் கொண்டேயிருந்தது. படத்தை எடுத்தது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இயக்குநர் என்பதால் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவனுக்கு இயல்பாகவே இருக்கக் கூடிய விழிப்புடனேயே அரங்கில் இருந்தேன்.


ஆனால் படம் முடியும்முன்பாகவே எனது கேள்விகளிற்கு படம் தெளிவான விடைகளை அளித்துவிட்டது. யாழ்ப்பாணத்தைக் களமாகக் கொண்டு எடுக்கப்பட்ட படத்தில் ஓர் இராணுவத்தினைக் கூடக் காணமுடியவில்லையே என்ற கேள்வி எனக்கும் முதலிலிருந்தது. ஆனால் படம் முடிந்தபோது படத்தின் ஒவ்வொரு சட்டகத்திற்குள்ளும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் பிரசன்னம் இருப்பதை நான் உணர்ந்தேன். தணிக்கை விதிகள் கேவலம் சட்ட வல்லுனர்களால் உருவாக்கப்படுபவை, ஓர் அசல் கலைஞனால் தனது நுட்பமான சித்துகள் மூலம் அந்த விதிகளை நொறுக்கிப் போட முடியும்.

இலங்கையின் இனமுரண்களையும் யுத்தத்தின் பாடுகளையும் எந்தத் தமிழ் இயக்குநரைக் காட்டிலும் சிங்கள இயக்குநர்களே சினிமாவில் திருத்தமாகவும் நேர்மையாகவும் பதிவு செய்திருக்கிறார்கள். கருத்துச் சுதந்திரம் கடுமையாக ஒடுக்கப்படும் இலங்கைச் சூழலில் கிட்டத்தட்ட இவை இந்த இயக்குநர்களின் தற்கொலை முயற்சிகள்தான்.

படம் முடிந்ததன் பின்னாகக் கலந்துரையாடல் தொடங்கியது. இயக்குநர் அசோக ஹந்தகம அரங்கில் திரளாயிருந்த பார்வையாளர்களின் முன்னே சிறிய உருவத்துடனும் தீர்க்கமான பார்வையுடனும் நின்றுகொண்டிருந்தார்.

அவர் நிகழ்த்திய உரையில் "இந்தப்படத்தை எடுத்தது ஒரு சிங்களவர் என்பதால் தமிழர்கள் இதைச் சிங்களப்படம் என நிராகரிக்கிறார்கள், படம் தமிழில் எடுக்கப்பட்டதால் சிங்களவர்கள் தமிழ்ப் படமென நிராகரிக்கிறார்கள்" என்றார். அவர் அவ்வாறு சொல்லிச்சொன்ன வாய் மூடுவதற்கு முன்பே நான் இருக்கையிலிருந்து எழுந்துசென்று அசோக ஹந்தகமவின் கைகளைப் பற்றி முத்தமிட்டேன். மிகுந்த மனவெழுச்சியுடன் அப்போதிருந்தேன். இரண்டு மாதங்கள் கழித்து ஒரு சனிக்கிழமை மாலையில் இதே மனவெழுச்சியை லெனின் எம். சிவத்தின் "ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" திரைப்படம் மீண்டும் என்னில் கிளர்த்திற்று.

"ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" திரைப்படத்தின் களம் கனடா. கனடாவிற்குப் புலம்பெயர்ந்த ஈழத்து அகதிகள், ஒரு சூடான் நாட்டு அகதி, இரு கனடிய காவல்துறைப் புலனாய்வாளர்கள் ஆகியோர் கதைமாந்தர்கள். நாயகன், நாயகி என யாருமில்லை. வித்தியாசம் வித்தியாசமான, ஆனால் ஒன்றோடு ஒன்று ஊடும்பாவுமாகச் செல்லும் ஆறு தனிக்கதைகளை ஒரு கணையாழியும் ஒரு துப்பாக்கியும் ஒரு மையத்தில் இணைக்கின்றன. அந்த மையம் போரின் தழும்பாயிருக்கிறது.





லெனின் சிவம்

இந்தப் படத்தை எதார்த்தப் பாணியில் உருவாக்கப்பட்ட படமாகச் சொல்ல முடியாது. படத்தின் ஒவ்வொரு பாத்திரங்களும் தனித்துவமானவையல்ல. அவை வகைமாதிரிப் பாத்திரங்களாகவே பிரக்ஞையுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன. காட்சிகளை அமைத்த விதமும் எதார்த்தப் பாணியிலானதல்ல. ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு உருவகம். ஒவ்வொரு சட்டகமும் குறியீடுகளால் நிரப்பப்பட்டவை. சற்றுக் கவனம் தவறியிருந்தாலும் திரையில் நிகழ்த்தப்பட்ட ஒரு நவீன நாடகம்போல படம் வீழ்ந்திருக்கும்.

இந்தக் கதையைத் திரைப்படப் பிரதியாக எழுதுவது சாமான்ய காரியமில்லை. மிகச் சிக்கல்களும் முடிச்சுகளும் கொண்ட கதை. கடுமையான உழைப்பினால் வெறும் பதின்நான்கே நாட்களிற்குள் படப்பிடிப்பை முடித்துவிட்டார்கள். கமராவுக்கு முன்னால் ஐம்பதிற்கும் மேற்பட்ட நடிகர்கள். கமராவுக்குப் பின்னால் நாற்பது உழைப்பாளிகள். இந்தியாவில் நடைபெறும் கதைக் காட்சியை கனடாவிலேயே படம் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம். படம்பிடிக்கப்படும்போதே வசனங்களும் நேரடியாக ஒலிப்பதிவாகின்றன. கனடாவின் தெந்தெட்டுக் காலநிலை. தொழில்முறை நடிகர்கள் யாருமில்லை. ஓரிரு நடிகர்களைத் தவிர மற்றவர்களிற்கு இதுதான் முதற்படம்.

இந்தப் பாடுகள் எல்லாம் அப்படியே சிந்தாமல் சிதறாமல் களத்தில் சேகரிக்கப்பட்டு திரையில் ரசவாதம் நிகழ்ந்திருக்கிறது.

ஒரு பனிமொட்டு தனது இதழ்களை ஓசையில்லாமல் ஒவ்வொன்றாக மெல்ல விரித்து கடைசியில் மலராவது போல படம் முழுமை பெற்றிருக்கிறது. எளிமையின் அழகு. துல்லியமான அரசியல் சினிமா!

பொதுவாகப் புகலிடத்தில் உருவாக்கப்படும் தமிழ் திரைப்படங்களும் குறும்படங்களும், ஈழத்தில் புலிகள் உருவாக்கிய படங்களைக்காட்டிலும் பிரசாரத்திலும் தேசியவாத உணர்ச்கொந்தளிப்பிலும் சற்று அதிகமாகவே மூழ்கிவிடுவன. அவ்வளவும் அரசியல் விடலைத்தனமும் கலைப் போலியும் மட்டுமே. இத்தகைய காலக்கொடுமைப் படங்களிற்கும் "ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" படத்திற்கும் வெகுதூரம்.

யுத்தம் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் வலிகளையும் வடுக்களையும் மிகை உணர்ச்சியின் வழியே அல்லாமல் அகப் பார்வையின் வழியே துன்பியலின் அழகியலோடு படம் சொல்லிச் செல்கிறது. ஈழத் தமிழர்களின் இழப்புக்களையும் துயர்களையும் அது உரத்த பிரசாரகர்கள் வழியே அல்லாமல் சாதாரண மானவர்களின் ஆன்மாக்கள் வழியாக நம்மிடம் கையளிக்கின்றது. ஈழத் தமிழர்களின் துயரையும் ஓர் ஆபிரிக்க யுத்த சாட்சியின் துயரையும் ஒரே புள்ளியில் இணைத்து உலகம் தழுவிய அகதிகளின் துயராகப் படம் விரிகிறது.

புலம் பெயர்ந்த அகதிகளின் வாழ்வைச் சொல்கிறோம் என ஏராளம் படங்கள் வந்துவிட்டன. அவை மது ஒழிப்பு, ரவுடியிஸ ஒழிப்பு, தமிழ் கலாசாரக் காவல் என மோசமான முறையில் எடுக்கப்பட்ட ஆவணப்படங்களாக எஞ்சின, அல்லது "புலிவால்" படங்களாகக் கந்தறுந்தன. இவற்றிற்கு வெளியே இதய சுத்தியுடன் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை கடுமையான கலை வறுமையால் செத்தே பிறந்தன. 1996இல் அருந்ததியின் இயக்கத்தில் வெளியான "முகம்" திரைப்படம் மட்டுமே சினிமாவுக்கேயான அழகியலோடு அகதிகளின் ஆன்மாக்களைப் பேசவைத்தது. "முகம்" எண்பதுகளில் புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையைப் பற்றிப் பேசியது. லெனின் எம். சிவம் இரண்டாயிரம்களில் வாழும் முதல் அகதித் தலைமுறை குறித்தும், இரண்டாவது தலைமுறை குறித்தும் பேசியிருக்கிறார்.

1980-களின் நடுப்பகுதியில் தமிழகத்தில் ஈழ விடுதலை இயக்கங்களின் பயிற்சி முகாம்கள் பரவலாக இருந்தன. அந்த முகாம்களில் உள்ளியக்க மோதல்களில் மனித விழுமியங்களுக்கு ஒவ்வாத முறையில் சித்திரவதைகளும் படுகொலைகளும் நடந்தன. போராட்டத்திற்கு எனச் சென்ற பல இளைஞர்கள் வெறும் சந்தேகங்களின் பேரிலே கொல்லப்பட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலிருந்துதான் "ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" படத்தின் கதை ஆரம்பமாகிறது.

இந்த இரத்தப்பழி வரலாறு பதிவு செய்யப்பட வேண்டும், திரும்பத் திரும்ப அழுத்தமாகப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. படத்தில் குறிப்பிடப்படும் இயக்கத்தை டெலோ இயக்கமாகவோ புலிகள் இயக்கமாகவோகூட ஒருவர் கருதிக் கொள்ள வாய்ப்புகளுள்ளன. ஆனால் இயக்குனர் அந்த இயக்கம் புலிகள் இயக்கம் அல்ல என்பதை திரைக் கதைக்குத் தேவையே இல்லாத மேலதிகமான ஓர் ஒட்டு வசனம் மூலம் பார்வையாளர்களிற்கு உணர்த்தி விடுகிறார். அந்த இயக்கத்திலிருந்து தப்பியோடத் திட்டமிட்ட போராளிகள் விசாரணை செய்யப்படும்போது விசாரணைக்கு உள்ளாகும் போராளி, அங்கிருந்து தப்பி புலிகள் இயக்கத்தின் முகாமிற்கு ஓடத் திட்டமிட்டிருந்ததாகக் கூறுகிறான்.

இந்த உபரி வசனம் படத்தில்சேர்க்கப் பட்டிருக்காவிட்டால் இந்தப்படம் மிகப் பெரிய எதிர்ப்புகளை புலம் பெயர்ந்த புலி ஆதரவாளர்களிடம் சந்தித்திருக்கும். அவர்கள் கலைக்கு இவ்வாறு தாறுமாறாக மரியாதை செய்யப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். இன்றும் கூடப் புகலிடத்தில் ஏராளமான கலாசார அமைப்புகளையும் கலை அமைப்புகளையும் ஊடகங்களையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதால் படத்தைத் திரையிடுவதில் சிக்கல்களும் ஏற்பட்டிருக்கும்.

எனினும் இதை இயக்குனரின் சமரசப் புள்ளியாகக் குறித்துக்காட்டுவதும் முழுமையாகச் சரியாகாது. ஏனெனில் புளொட் இயக்கத்தில் அவ்வாறு கொலைகள் நிகழ்ந்தன. அந்த இயக்கத்தின் பயிற்சி முகாம்களிலிருந்து போராளிகள் தப்பியோடிப் புலிகள் இயக்கத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மையே.

(18ஆம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர்ந்தோரின் கைப்பாவையாக மாறியுள்ளது வடமாகாண சபை

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களின் கைப்பொம்மையாக வடமாகாண சபை மாறியுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

வீட்டில் பிரச்சினை ஏற்படும் போது அப்பாவுடன் கதைக் காமல் பக்கத்து வீட்டில் உள்ள சித்தப்பாவுடன் கதைப்பதால் அந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. இது போன்றே எமது நாட்டு பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வடக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி வடமாகாண சபையில் நிறை வேற்றப்பட்டுள்ள பிரேரணை எமக்கு எவ்விததாக்கத்தையும் செலுத்தப்போவதில்லை. வடமாகாண சபையானது இன்று புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் கைப்பாவையாக மாறியுள்ளது. இதனால் வடமாகாண சபையை இழக்கவேண்டிய வழிவகைகளை அவர்களே தேடிக்கொள்கின்றனர்.

நமது நாட்டில் மழை பெய்யும் போது அமெரிக்காவில் குடை பிடிப்பதில் எவ்வித பயனும் இல்லை. வடமாகாண சபையினருடன் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடத் தயாராகவே இருக்கிறோம். நாம் நீட்டும் சமாதானக் கரங்களை கடித்து விடக்கூடாது. எதுவாக இருந்தாலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்தாலோசித்து தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும்



அத்துடன் எமது சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன என்பதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். உள்ளூராட்சி தேர்தல்களின போது விருப்பு வாக்கு முறையை இல்லாமல் செய்து தொகுதி வாரி முறைக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலையும் அவ்வாறு தொகுதி வாரியாக நடாத்துவது தொடர்பில் ஆழமாக சிந்தித்து வருகின்றோம். உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது எமக்கு கிடைக்கும் அனுபவங்களைப் பயன்படுத்திக் கொண்டு இறுதித் தீர்மானம் எடுப்போம். எனத் தெரிவித்தார்.

# இலங்கை எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுகிறார் பிரதமர் கமரூன்

## பேராசிரியர் நளின்டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையின் எதிர்க்கட்சியாக பிரித்தானியாவின் கொன்சர்வேட்டிவ் கட்சி செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவராக பிரதமர் கமரூன் உள்ளதாகவும் தேசப்பற்றுடைய பிக்குள் முன்னணியின் உறுப்பினர் பேராசியர் நளின்டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் சிறியளவிலான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வது அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூனின் நோக்கமல்ல

இந்த அரசாங்கத்தை கவிழ்த்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியில் இருத்தி தண்டிப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இந்த தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் குறிப்பிட்டிருந்ததார். அவ்வாறு ரணில் தண்டனை அனுபவிக்கச் சென்றால் வெளிநாட்டுச் சக்திகள் மின்சார நாற்காலியின் மின்சாரத்தை துண்டித்துவிடும்

நாட்டில் எதிர்க்கட்சியோ, எதிர்க்கட்சித் தலைவர்களோ கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது நாட்டுக்கு ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிக்குவின் கணனியில் ஆபாசப்படங்கள்

(கொழும்பு)

வர்த்தகர் ஒருவரிடம் இருந்து தங்கத்தை கொள்ளையிட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மீகெட்டுவத்தே சுமித்த தேரரின் கணனியில் ஆபாசப் படங்களும், புகைப்படங்களும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான தேரரின் கணனியை சோதனையிட்டபோது அதில் 832 ஆபாசப் படங்களும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆபாசப் புகைப்படங்களும் இருந்துள்ளன.

நீதிமன்ற உத்தரவின் பேரில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி தொழில்நுட்ப பிரிவுக்கு தேரரின் கணனி அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்ட போதே இது தெரியவந்ததாக பொலிஸார கூறினர்.

எவ்வாறாயினும் கொள்ளைச் சமபவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சுமித்ததேரர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்படடுள்ளார்.

# தேயிலைத்தூள் முதலாளியே அமெரிக்காவிற்கான தூதுவர்



## என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி

தேயிலைத் தூள் முதலாளி ஒருவரையே அரசாங்கம், உலக வல்லரசான அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக அனுப்பி வைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினரான அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவரால் நாட்டுக்காக எந்தச் சேவையையும் பெற்றுக்கொடுக்க முடியாது.

62 நாடுகளுக்கு அரசாங்கம் தமக்கு நெருக்கமானவர்களையே தூதுவர்களாக நியமித்துள்ளது

உறவினர்கள், ஓய்வுபெற்ற அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் என தூதுவர்கள் அனைவரும் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாட்டின் நற்பெயரை பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை. இந்த தூதுவர்களுக்கு இராஜதந்திர சேவையில் ஈடுபடத்தேவையான போதிய அறிவு இல்லை.

அமெரிக்காவின் தூதுவராக ஜனாதிபதி குடும்பத்தை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகளை மதிக்கவில்லை உள்ளிட்ட செயல்களை சுட்டிக் காட்டி அமெரிக்க காங்கிரசில் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டது என்றார்.

# அமைச்சர் சிறிசேனவின் வீட்டில் 15 கிலோ கிழங்கு விளைந்தது



(கொழும்பு)

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கொழும்பில் கடந்த வருடம் வசித்து வந்த வீட்டின் தோட்டத்தில் பயிரிட்ட ஏஷமா என்ற கிழங்குப் பயிரில் இருந்து 15 கிலோகிராம் எடை கொண்ட கிழங்கொன்றை அறுவடை செயதுள்ளார்.

விவசாயத் திணைக்களம் 1976ஆம் ஆண்டு இந்தக் கிழங்கு இனத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்தது.

5 அடி ஆழத்தில் பயிரிடப்படும் இந்தக் கிழங்குப் பயிர் ஒரு வருடத்திற்குப் பின்னர் விளைச்சலைக் கொடுக்கும்.

தனது வீட்டுத் தோட்டத்தில் அறுவடைசெய்த கிழங்கைப் பார்த்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, தான் மண்ணுக்கு தலை வணங்கி வாழும் நபர் என்பதால், மண்ணும் தனக்கு பதில கொடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

# ஊடக சுதந்திர சுட்டியில் இலங்கையின் நிலை 165

ஊடக சுதந்திரம் தொடர்பான அனைத்துலக சுட்டியில், இலங்கை மேலும் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்த ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர சுட்டியில், இலங்கை மோசமான நிலையில் உள்ள 10 நாடுகளுக்குள் இடம் பிடித்துள்ளது.

பாரிசை தலைமையகமாக கொண்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பினால், வெளியிடப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான சுட்டியில், இலங்கை 165 ஆவது இடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இரண்டு இடங்கள் இலங்கை பின்தள்ளப்பட்டுள்ளது.

தெற்காசியாவில், இந்தியா 140 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 158 ஆவது இடத்திலும், நேபாளம் 120ஆவது இடத்திலும், மாலைதீவு 108ஆவது இடத்திலும் உள்ள நிலையில், இலங்கையை மிக மோசமான நிலையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான சுட்டியில், பின்லாந்து, நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் முன்னணி இடங்களிலும், துர்க்மெனிஸ்தான், வடகொரியா, எரித்திரியா ஆகிய நாடுகள் கடைசி இடங்களிலும் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சுட்டியில், அமெரிக்கா 13 இடங்களை இழந்து 46ஆவது இடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஊடக சுதந்திரச் சுட்டி, மீறல்களின் அளவு, பன்மைத்துவத்தின் அளவு, ஊடக சுதந்திரம், சூழல் மற்றும் சுயதணிக்கை, சட்ட வரையறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் உட்கட்டமைப்பு என ஏழு விடயங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது

# காலாவதியான சிறுவர் உணவு அழிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பங்களாதேஷில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு காலாவதியான சிறுவர்கள் உண்ணும் உணவு வகைகளை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடுவல - வெலே சந்தியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில இருந்து காலாவதியான 62115 சிறுவர் உணவு பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபை கூறியுள்ளது.

இவை 40 இலட்சம் ரூபா பெறுமதியானவை என கணிப்பிடப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின் பின் நேற்று முன்தினம் கடுவல நீதவான்முன்னிலையில் உணவு தொகை சமர்ப்பிக்கப்பட்டபோது அவற்றை அழிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, அவற்றை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# எதேச்சாதிகாரமாக செயற்படும் இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு

## ஜே.வி.பி. விசனம்

(கொழும்பு)



லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது. இலஞ்ச ஊழல் த்விர்ப்பு ஆணைக்குழு எதேச்சாதிகார போக்கில் செயற்பட்டுள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக் குழுவின் ஆணையாளர் ஜகத் பாலபட்டபந்திக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடு உரிய முறை யில் விசாரணை செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இயற்கை நீதிக்கு முரணான வகையில் இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைகுழு செயற்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆணையாளருக்கு எதிரான விசாரணைகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய தகவல்கள் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முறைப்பாட்டை தாமே செய்ததாகவும், முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாது என்பது பற்றிய தகவல்களை ஊடகங்களிலேயே தாம் அறிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயர் பதவிகளை வகிப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யக் கூடாது என்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.



சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய உள்ளக அரங்கு திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதையும், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் கட்டட ஒப்பந்ததாரர் சி.இராமச்சந்திரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (படங்கள்: ஆர்.இராஜகுமார்)

# உயர்தொழில் வாய்ப்பை பெறுவதற்கு தகவல்தொழில் நுட்பம் அவசியமானது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



இளம் தலைமுறையினருக்கான தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தும் பிரிவாக பாடசாலைகளில் தொழில்நுட்ப பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தெரிவு நுட்ப அறிவை விருத்தி செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தொழிநுட்ப துறைசார்ந்த விசேட செயலமர்வில் கலந்து கொண்ட தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தரார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் தொழில்நுட்ப பாடத்தை ஒரு பிரிவாகக் கற்கக்கூடிய வாய்ப்பு 2015 ஆம் ஆண்டு பரீட்சை எழுதும் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கே கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பை கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளில் மட்டுமே எம்மால் நடைமுறைப் படுத்த முடிந்துள்ளது.

ஆயினும், மாவட்டத்தில் மேலும் இரண்டு பாடசாலைகளிலும் இப்பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும், தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஆறு கோடி ரூபா பெறுமதியான மூன்று மாடிக் கட்டடங்களையும் அமைத்துக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதோடு கற்றல் உபகரணங்களையும் ஆய்வு கூடங்களையும் வழங்கவுள்ளது. இதற்கமைவாக நாட்டில் 240 பாடசாலைகள் இந்த வாய்ப்புகளை பெறுகின்றன.

இவை அனைத்திற்கும் மேலாக கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் பக்க துணையாக செயற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் பத்மநாதன் மற்றும் தொழில்நுட்ப பிரிவு அசிரியர்களான பிரதீப்குமார் வினோத் ஆகியோரும் உடனிருந்தனர்.

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வொன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 1 மணிவரை, இலக்கம். 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வில் கழக உறுப்பினர்கள், நண்பர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டு உயிர் கொடுக்கும் உன்னத பணியில் பங்கு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (27)

# முரசின் இன்றைய பலன்



(14.02.2014 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 02 ஆம் திகதி.
மரணயோகம் / பூரணை. ஆயிலியம் நட்சத்திரம் பி.இ. 01.58 வரை.
பின் மகம்.
இராகு காலம் 11.08 - 12.32 வரை. சுபநேரம் 06.33 - 08.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வியாபாரத்தில் புதிய யுக்தியை கையாண்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளல், தேவையைக் கருதிப் பணத்தைச் செலவிடுங்கள். |
| ரிஷபம் | சட்டவிரோதச் செயற்பாட்டால் மாட்டிக் கொள்ளல், இன்று நல்லமாற்றம் அதிரடியாக ஏற்பட்டு குதூகலத்தை தக்க வைக்கும். |
| மிதுனம் | உடல் நிறை அதிகரிப்பால் தேக நலனில் பாதிப்பு, தற்காலிக பதவி நிரந்தரமாக்கப்பட்டதால் மகிழ்ச்சி. |
| கடகம் | உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமையால் கவலை, குழப்பமும் குளறுபடியும் ஏற்பட்டதால் பணியகத்தில் நிம்மதிக் குறைவு. |
| சிம்மம் | திருமண பேச்சுவார்த்தை சாதமாக முடிதல், மனைவியின் கவனக்குறைவால் பணி தாமதமடைதல். |
| கன்னி | பிள்ளையிடம் கண்டிப்பாக இருந்ததால் குடும்பத்தில் கலவரம், விட்டுக்கொடுப்பினால் பணி சிறப்படைதல். |
| துலாம் | சட்டவிரோத செயற்பாட்டால் தண்டனைக்குள்ளதால், பிரச்சினையை தீர்க்க ஆலோசனை பெறல். |
| விருச்சிகம் | மேலதிகாரிகளின் செயற்பாட்டை எண்ணி மனக் கவலையடைதல், வழக்கின் தீர்ப்பு சாதகமாக அமையலாம் என்ற நம்பிக்கை பிறத்தல். |
| தனுசு | பெற்றோரின் ஆலோசனையை உதாசீனம் செய்தல், வீட்டுப்பணிகளில் ஒத்தாசை புரிந்து பாராட் டைப் பெறல். |
| மகரம் | காசோலை மோசடி குறித்து அவதானமாக இருத்தல், அதிகாரியின் செயற்பாட்டை எதிர்த்தல். |
| கும்பம் | எதிர்ப்புக்கள், போட்டிகள் ஏற்படுவதினால் பணிவாக நடந்து கொள்வீர், கூட்டு முயற்சிகளை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள். |
| மீனம் | சுதந்திரமாக செயற்பட்டால் விளைவு ஏற்படும், நியாயத்தை எடுத்துக்கூறியதால் பிரச்சினைக்கு தீர்வு |

# கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

## நெஞ்சிலே நஞ்சுள்ளவர்

ஒருவர் தன்னுடைய கைகளைக் கூடுமான வரையில் ஆடைகளில் பைகளில் (pocket) மறைத்துக் கொள்பவரேயானால் அவர் சிறிதும் நம்பிக்கைக்குரிய நபரே அல்லர். இவருடைய வாழ்க்கைச் சரிதம் பல இரகசியங்களைக் கொண்டதாய் இருக்கும். இந்த இரகசியங்கள் எங்கே வெளிப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருக்கும். இத்தகையோர் தனக்கு பிரியமான நண்பர்களிடத்தில் கூட தன் மனதில் உள்ளதை ஒளிவுமறைவின்றிப்பேசமாட்டார். அவருடைய பேச்சிலே இனிமை இருக்கும். ஆனால் நெஞ்சிலே நஞ்சு குடிகொண்டிருக்கும். கபடத்தனமுள்ளவர். பிறருடைய வாழ்வு துன்புறுவதைக் கண்டதும் அவர் உள்ளூர மகிழ்ச்சி கொள்வார். எவரையும் நேருக்கு நேராகப்பகைத்துக் கொள்ளத்துணியமாட்டார், எனினும் மறைமுகமாகப் பல தீங்குகளை அடாவடித்தனங்களைச் செய்யப் பின்நிற்கமாட்டார். பெட்டிசம் எழுதும் கலையில் இவர்கள் முடி சூடா மன்னர்களாக விளங்குவது கண்கூடு. ஒருவரோடு மிகவும் நட்பாகப் பழகிக் கொண்டிருக்கும்போதே, அந்த மனிதரை எந்த வகையில் ஏமாற்றலாம், அல்லது மோசடி செய்யலாம் என்ற எண்ணமே இவரது மனத்திரையில் ஓடிக் கொண்டிருக்கும். இவர் மற்றவர்களுடன் நட்புக் கொள்வதே அவர்களை ஏமாற்றி இன்பமும் இலாபமும் அடைவதற்காகும்.

இவருக்கு எவரிடத்திலுமே உண்மையான அன்பு அறவே இருக்காது. ஆகையால் மனைவி மக்களும் ஏனையோரும் கூட இவரிடத்தில் உண்மையான அன்புடையவர்களாக இருக்கவே மாட்டார்கள். இவரது நாய் கூட இவரை நம்பாதிருக்கும். இவருக்கு மனச்சாட்சி என்பதே இல்லாது போய்விடும். வாழ்க்கையில் பெரியவசதி படைத்த சீமான் போல் காட்சியளித்தாலும் உள்ளுக்குள் ஏகப்பட்ட ஓட்டைகள் இருக்கும். அவற்றை வெளியே தெரியாமல் மறைத்துக் காப்பாற்றிக் கொள்வதில் இவர்கள் மிகவும் கெட்டித்தனம் வாய்ந்தவர்கள் எந்தநாளும் இவர்கள் உள்ளத்தில் ஏதாவதொரு சஞ்சலம் இருந்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும். ஆனால் வெளிப்பார்வைக்குச்சிறிதும் கவலை இல்லாதவர் போலவும் எப்பொழுதும் உற்சாகமாய் இருப்பவர் போலவும் மேடை இல்லாமல் நடித்துக் கொண்டிருப்பார்கள்.

துட்டரைக் கண்டால் தூரவிலகுபவர்கள் பாக்கியவான்களாக இருப்பது போல இத்தகையோரின் தொடர்புகளைத் துண்டிப்போர்கள் ஆபத்துக்களை விலைக்கு வாங்காது தப்பிப்பிழைத்து விடுவர். இவர்களில் சிலர் பாலியல் பலவீனத்தால் சக்தியை விரயமாக்கி வண்டியின் கீழே கைகளை வைத்திருப்பர். இவரின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்து போவார்கள். (தொடரும்)

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

# ஸ்திரமான நிலையில் ஆஸி.




(செஞ்சூரியன்)

ஷோன் மார்ஷ், ஸ்மித் ஆகியோரின் பலமான இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்ரேலிய அணி நெருக்கடியிலிருந்து மீண்டது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் செஞ்சூரியனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இந்நிலையில் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. மோர்கல், ஸ்ரெய்ன் ஆகியோர் முதலிரு விக்கெட்டுக்களை சாய்த்து அவுஸ்ரேலிய அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். தொடர்ந்து கப்டன் கிளார்க்கின் விக்கெட்டும் விரைவில் சரிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் அவுஸ்ரேலிய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த ஸ்மித் ஷோன் மார்ஷிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். இந்த ஜோடி மிகவும் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெல்ல மெல்ல அதிகரித்தது. இந்த ஜோடியைப் பிரிக்க தென்னாபிரிக்க அணிக் கப்டன் ஸ்மித் சுழற்சி முறையில் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தி நெருக்கடி கொடுத்தார். எந்த வியூகத்திற்கும் வளைந்து கொடுக்காத இந்த ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதிலேயே குறியாக இருந்தது. தென்னாபிரிக்காவின் பந்து வீச்சாளர்களை மிகவும் இலாவகரமாக எதிர்கொண்ட இந்த ஜோடி பவுண்டரிகள், இரட்டை இலக்க ஓட்டங்களை விளாசியதுடன் சதத்தை எட்டினர். இறுதியில் இந்த ஜோடி 233 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவுஸ்ரேலிய அணியின் மூன்று விக்கெட்டுக்கள் விரைவாகச் சாய்க்கப்பட்டன. இந்நிலையில் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ஜோன்சன், ஹரிஸ் இணை அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களை இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷோன் மார்ஷ் 288 பந்துகளை எதிர்கொண்டு 14 பவுண்டரிகள் அடங்கலாக 148 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட்அரங்கில் மார்ஷ் பெற்றுக் கொண்ட இரண்டாவது சதமாக இது அமைந்தது. ஸ்மித் 213 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்லாக 100 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் இவர் பெற்றுக் கொண்ட ஐந்தாவது சதம் இது. மற் றும் ஜோன்சன் 33, ஹரிஸ் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



## இல்ல மெய்வல்லுநர்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி மங்களேஸ்வரி சேதுலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழகேஸ்வரசுவாமி ஸ்ரீகரன் கலந்துகொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி லோகேஸ்வரி ஸ்ரீகரன் வழங்கவுள்ளார். (109)

(மீசாலை)

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா. ஜானககுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வித்தியாலய முன்னாள் அதிபர் ம. அம்பலவாணர், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்வி ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராசா, பாடசாலை நலன்புரிச் சங்கத் தலைவர் ஏ. சந்திரகாயன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (11)



## கொலிங்வூட் நியமனம்

(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் பங்களாதேஷில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டிகளுக்கான இங்கிலாந்து பயிற்றுவிப்பாளராக முன்னாள் வீரர் போல் கொலிங்வூட் சேர்க்கப்பட்டுள்ளார்.

டேஹாம் அணியின் சகலதுறை வீரரான 37 வயது போல் கொலிங்வூட், 68 டெஸ்ட் போட்டிகளிலும் 197 ஒரு நாள் போட்டிகளிலும், 35 ருவென்ரி-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

கரிபியன் தீவுகளில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டிகளை இங்கிலாந்து வெற்றிபெற்றபோது அணியின் கப்டனாக கொலிங்வூட் கடமையாற்றினார்.

கொலிங்வூட் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிய சகல அணிகளுக்கும் வழங்கிய உற்சாகத்தை இங்கும் எதிர்பார்ப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டவுன்ரொன் தெரிவித்துள்ளார்.

## யுவராஜை வாங்கியதால் பலமடையும் பெங்களூர்



யுவராஜ்சிங்கை ஏலத்தில் எடுத்ததன் மூலம் எங்கள் அணி மேலும் பலமடைந்துள்ளது என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி உரிமையாளர் விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

யுவராஜ்சிங் கடந்த சீசனில், புனே வாரியர்ஸ் அணிக்காக (தற்போது இந்த அணி நீக்கப்பட்டு விட்டது) விளையாடினார். 2011ஆம் ஆண்டில் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர் (தற்போதைய இந்திய ரூபாய் மதிப்பு ரூ.11 கோடி) கொடுத்து அவரை புனே அணி எடுத்திருந்தது.

இப்போது அதையும் தாண்டி யுவராஜ்சிங் சாதனை படைத்திருக்கிறார். அவரை இவ்வளவு தொகை கொடுத்து வாங்கியது ஏன் என்பது குறித்து விளக்கம் அளித்த பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் உரிமையாளர் தொழிலதிபர் விஜய் மல்லையா யுவராஜ்சிங்கை வாங்க வேண்டும் என்பதில் எங்கள் அணியின் கப்டன் ஹோலி மிகவும் ஆர்வமாக இருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ரூ.4 கோடி (குழப்பம் ஏற்பட்டதை சுட்டிக்காட்டி) கூடுதலாக போய்விட்டது. ஆனாலும் ஏலத்தை தொடருவதா? முடிப்பதா என்பது ஏலம் நடத்துபவருக்கே உள்ள உரிமை. இந்த அதிகரிப்புக்கு கொல்கத்தா அணி நிர்வாகமே காரணம். வேண்டுமென்ற ஏலத் தொகையை அதிகரித்தது. இது குறித்து நாங்கள் அதிகம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஹோலி, கெய்ல், டிவில்லியர்ஸ் ஏற்கனவே எங்களிடம் உள்ள நிலையில் யுவராஜ்சிங்கை வாங்கியதன் மூலம் எங்களது அணி மேலும் வலுவடைந்துள்ளது. என்றார்.

இதேவேளை, ஐ.பி.எல். போட்டி வரலாற்றில் யுவராஜ்சிங்கே அதிகபட்ச விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றார். இதற்கு முன்பு 2011ஆம் ஆண்டில் கௌதம் கம்பீர் 11.04 கோடிக்கு (கொல்கத்தா அணிக்கு) ஏலம் போனதே அதிகபட்சமாக இருந்து வந்தது. அதுமட்டுமின்றி இந்த ஐ.பி.எல். போட்டியில் அணிகளால் தக்கவைக்கப்படும் கப்டன்களுக்கு ஊதியமாக 12.5 கோடி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி தக்கவைக்கப்பட்டிருக்கும் சென்னை அணியின் கப்டன் டோனி, பெங்களூர் அணியின் கப்டன் ஹோலி, ராஜஸ்தான் அணியின் கப்டன் வட்சன் ஆகியோரின் சம்பளத்தையும் மிஞ்சி யுவராஜ்சிங் சாதனை படைத்துள்ளார்.

இதேவேளை, வீரர்கள் ஏலம் இரண்டாவது நாளாக நேற்றும் பெங்களூரில் நடைபெற்றது. சர்வதேச அளவில் பங்கேற்காத வீரர்கள் ஏலத்தில் விடப்பட்டனர். இதில் இந்தியாவின் உள்ளூர் வீரர்களுக்கு அதிக முக்கியதுவம் அளிக்கப்பட்டது. தவான் 3 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியது. 20 இலட்சம் அடிப்படை ஏலத்தொகை நிர்ணயிக்கப்பட்டிருந்த இவருக்கு 2.80 கோடி அதிகமாக ஜாக்பாட் அடித்தது. தொடர்ந்து நடந்த ஏலத்தில் கரண் சர்மாவை ரூ. 3.75 கோடிக்கு அதிகபட்சமாக ஹைதராபாத் அணி வாங்கியது. நேற்றைய தினம் நடைபெற்ற ஏலத்தில் 13 இந்திய உள்ளூர் வீரர்கள் ஏலம் எடுக்கப்பட்டனர்.

நியூசிலாந்து முன்னாள் கப்டன் ரெய்லர் 2 கோடிக்கு டில்லி டேர் டெவில்ஸ் ஏலம் எடுத்தது. இந்த அமர்வில் 41 வீரர்கள் ஏலத்தில் உள்ளனர். இதில் மஹேல ஜெயவர்த்தனவும் ஏலத்தில் விடப்பட்டார். நேற்றைய தினமும் அவரை எவரும் ஏலம் எடுக்கவில்லை.

## மென்பந்து கிரிக்கெட்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இளைஞர் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடர் இன்றைய தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி ஐந்து ஓவர்களாக இடம்பெறவுள்ளது. இதேவேளை, பெண்களுக்கான போட்டி நாளைய தினம் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## நாளைய ஆட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் விக்ரம், ராஜன் கங்கு வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று நாளை சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஸ்ரீகாமாட்சி அணி, யாழ். பல்கலை அணியும் மோதவுள்ளன

## மீளவும் இந்திய அணியில் இடம் பிடிப்பதே இலக்கு

(சென்னை)

ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக ஆடி மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிப்பதே எனது இலக்கு என தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்கை 12 அரைக் கோடிக்கு டில்லி டேர்டெவில்ஸ் அணி எடுத்தது.

கடந்த ஐ.பி.எல்.இல் தினேஷ் கார்த்திக் அதிரடியாக விளையாடியதால் அவருக்கு ஏலத்தில் அதிக மவுசு ஏற்பட்டது. இதனால் அவருக்கான ஏலத்தொகை உயர்ந்தது.

இறுதியில் டில்லி அனி 12 அரைக் கோடி கொடுத்து எடுத்தது. அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலை 2 கோடியாகும். அதில் இருந்து 6 மடங்கு அதிகமாக அவர் விலை போய் இருக்கிறார். இதுகுறித்து தினேஷ் கார்த்திக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரூ.12 அரைக் கோடிக்கு என்னை எடுப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. காலையில் நான் இரானி கிரிக்கெட் தொடரின் கர்நாடகா அணிக்கு எதிராக ஆடிக் கொண்டிருந்தேன். ஓய்வறை திரும்பியதும் எனது நண்பர்கள் தான் இதை என்னிடம் தெரிவித்தனர்.

ஐ.பி.எல். போட்டியில் எனது பங்களிப்பை சிறந்த முறையில் வெளிப்படுத்துவேன். எனக்கு எவ்வளவு விலை கொடுக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. ஐ.பி.எல்.இல் சிறப்பாக ஆடி இந்திய அணிக்கு மீண்டும் திரும்புவதே எனது இலக்காக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

தினேஷ் கார்த்திக் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் டில்லி அணியில் விளையாடினார். அப்போது அவரை 2.1 கோடிக்கு எடுத்தது. பின்னர் கிங்ஸ் லெவன் அவரை வாங்கியது. 2012ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணி 5 கோடிக்கு அவரை எடுத்தது. தற்போது மீண்டும் டில்லி அணிக்கே 12அரைக் கோடிக்கு திரும்பியிருக்கிறார்.

## பனிக்கால ஒலிம்பிக் முதலிடத்தில் ஜேர்மன்

(சோச்சி)

ரஷ்யாவின் சோச்சி நகரில் இடம்பெற்று வரும் பனிக்கால ஒலிம்பிக் போட்டித் தொடரின் பதக்கப்பட்டியலில் ஜேர்மனி முதலாம் இடத்தில் உள்ளது.

ஜேர்மன் ஆறு தங்க ப்பதக்கங்களையும், ஒவ்வொரு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களையும் கைப்பற்றியுள்ளது.

நான்கு தங்கப் பதக்கங்கள் உள்ளடங்கலாக 10 பதக்கங்களை பெற்றுள்ள கனடா இரண்டாம் இடத்தில் உள்ளது.

நோர்வே 3ஆம் இடத்திலும், நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களிலும் உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## இல்ல மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

சென். ஜோண்ஸ் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் வண. ஞானப்பொன்ராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டி நிகழ்வில் பெற்றோரை தவறாது கலந்துகொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு கல்லூரிச் சமூகம் கேட்டுள்ளது. (எஸ்.பி.)

(அளவெட்டி)

அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுலகுமாரன், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர் ஜெ. மயில்வாகனம், கட்டுவன்புலம் மகாவித்தியாலய அதிபர் வா. தர்மபாலசுந்தரம், அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் பு. பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(கோண்டாவில்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கே. பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன். அருணகிரிநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று முற்பகல் 10.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ச. கணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோண் குயின்ரன் கலந்துகொள்ளவுள்ளனர்.

(சுன்னாகம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள பதில் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார், ஜோன் பொஸ்கோ பாடசாலை ஆசிரியர் திருமதி கீதா சத்தியபாலன் வழங்கவுள்ளனர். (48)

## யாழ். இந்துவின் வீதியோட்டம்; வெற்றியீட்டியோர்







(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதல் அங்கமாக நடைபெறும் வீதியோட்டப் போட்டி நேற்றுக் காலை 6:00 மணிக்கு நடைபெற்றது.

ஐந்து கிலோ மீற்றர் கொண்டதாக நடைபெற்ற இப்போட்டி இளநிலைப் பிரிவு, முது நிலைப்பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற்றன.

யாழ். இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பமான இப்போட்டி கஸ்தூரியார் வீதியூடாகச் சென்று பிறவுண் வீதி வழியாக பல்கலைக்கழக சந்தியினூடாக கே.கே.எஸ் வீதி வழியாக, நாச்சிமார் கோவிலடியைச் சென்றடைந்தது. அங்கிருந்து ஐயனார் கோவில் சந்தி, சுடுகாட்டாலடிச் சந்தி, ஓட்டுமடம் சந்தியூடாக மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.

இப்போட்டிகளில் நூற்றுக்கணக்கான வீரர்கள் பங்குபற்றினர்.

இளநிலைப் பிரிவில் முதலாம் இடத்தை கார்த்திகன் (பசுபதி இல்லம்), இரண்டாம் இடத்தை ஜே.கிருதகணேஷன் (நாகலிங்கம் இல்லம்) மூன்றாம் இடத்தை எஸ்.நிஷாந்தன் (நாகலிங்கம் இல்லம்) பெற்றனர்.

முது நிலைப்பிரிவில் முதலாம் இடத்தை எஸ்.சுபராஜ் (பசுபதி இல்லம்), ஜசிந்தன் (செல்லத்துரை இல்லம்) சதீஸ் (சபாபதி இல்லம்) பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர். (48)

## மீண்டும் ஆரம்பம்

(அளவெட்டி)

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டித் தொடரை கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடாத்தி வருகின்றது.

தவிர்க்க முடியாத காரணத்தால் போட்டிகள் கடந்த சில நாட்களாக நடைபெறவில்லை. இந்நிலையில் இப்போட்டித் தொடர் இன்று முதல் மீண்டும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் நடைபெறவுள்ள முதல் போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணியும், தொடர்ந்து நடைபெறவுள்ள போட்டியில் தையிட்டி வள்ளுவர் அணியை எதிர்த்து புதுமட்டம் வைகறை அணியும் மோதவுள்ளது. (48)

## இன்று இறுதி டெஸ்ட்

(வெலிங்ரன்)

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் நியூசிலாந்தின் வெலிங்ரனில் நடைபெறவுள்ளது. முதல் போட்டியில் நியூசிலாந்து அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தூர் கலைமதி முன்னேற்றம்

(இளவாலை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அடுத்த சுற்றுக்கு புத்தூர் கலைமதி அணி முன்னேறியுள்ளது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற அணிகளுக்கிடையிலான தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி தற்போது இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் காக்கைதீவு ஆதவன் அணியும் மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் கோல் போடாததால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் புத்தூர் கலைமதி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா அணியும், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் விக்னேஸ்வரா அணி முன்னிலை பெற்றிருந்த போதும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணி சிறப்பாக ஆடி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு ஆட்டத்தைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. இறுதியில் குறிஞ்சிக் குமரன் அணி 2: 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. குறிஞ்சிக்குமரன் அணிசார்பாக மதிவர்ணன் ஒரு கோலினையும் மயூரன் ஒருகோலினையும் பெற்றுக் கொடுத்தனர்.

இன்றைய தினம் அராலி ஏ.எல். அணியும், மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் அணியும் மோதவுள்ளன.

தொடர்ந்து காலிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் திருமகள் அணியை எதிர்த்து சாவற்காடு மகாத்மா அணி மோதவுள்ளது. (48, 93)

## பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க. மெய்வல்லுநர் திரேசா இல்லம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் திரேசா இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 6ஆம் திகதி பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

வீராங்கனைகள் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் திரேசா இல்லம் 342 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், மரியன்ஸ் இல்லம் 337 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஆன் இல்லம் 291 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. இதில் சம்பியன்களாக ஐந்து வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர். 11 வயதுப் பிரிவில் கிருபாகரன் அனுசா, 13 வயதுப் பிரிவில் இராஜேஸ்வரன் அனுசியா, 15 வயதுப் பிரிவில் அருள்ராஜ் அருண்யா, 17 வயதுப் பிரிவில் எஸ். சுபாஜினி, 19 வயதுப் பிரிவில் யேசுதாசன் நிசாந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். வித்தியாலய அதிபர் திருமதி ரி. பேரின்பம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக சட்டத் தரணி எஸ். செலஸ்ரின், கௌரவ விருந்தினராக பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை எஸ். றோய் பேடினற் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு வீராங்கனைகளை உற்சாகப்படுத்தினர். (எஸ்.பி.)

## இன்றைய ஆட்டம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு இரண்டு 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் அநுராதபுரம் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலானபோட்டி இன்றைய தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எஸ்.பி.)

# தீர்வை நோக்கிய மாற்றுச் சிந்தனையாளர்களின் கவனத்துக்கு!

– சாலையூரான் –

வடக்கின் உட்கட்டுமான அபிவிருத்தியில் முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ள போதும் அவை குடாநாட்டு மக்களின் வாழ்வு மேம்பாட்டில் கணிசமான முன்னேற்றங்களை காணமுடியாதிருப்பதாக பரவலாக விமர்சனங்கள் இப்போது எழுந்துள்ளன.

ஒரு பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் உட்கட்டுமான அபிவிருத்திக்கும் அங்கு வாழும் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வருவது இயல்பான ஒரு விடயம்.

அந்த வகையில் வீதி நிர்மாணம், மின்விநியோகம், சுகாதார நடவடிக்கைகள், கல்விக்கான வள ஒதுக்கீடுகள், போக்குவரத்து வசதிகள், சந்தை வாய்ப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகள் யாவும் அங்குள்ள உள்ளூராட்சி நிர்வாகத்தின் வரி வருமானங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

ஆனால் வடக்கில் நீண்ட போர்ச் சூழலின் ஒரு விளைவாக இந்த உள்ளாட்சி அமைப்பின் வரிவருமான மூலங்கள் யாவும் சிதைவடைந்துள்ள நிலையில் இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் மத்தியில் அரசிடமிருந்தே வழிப்பட்டிருக்கின்றன.

இந்த உட்கட்டமைப்பு வசதிகளில் குடாநாட்டுடன் ஏனைய மாவட்டங்களை இணைக்கும் பெருந்தெருக்கள் நிர்மாணம், பொதுக்கட்டடங்களின் புனரமைப்புக்கான ஒதுக்கீடுகள் கவனத்துக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளாகும்.

ஆனால் இந்த வீதிகள் நிர்மாணத்தை தமிழ்ச் சூழல் சாதகமாக நோக்க முடியால் இருப்பதற்கான பிரதான காரணம், இந்த செயற்றிட்டத்தில் தமிழ் முதலீட்டாளர்கள், முயற்சியாளர்கள் தமது செல்வாக்கை செலுத்த முடியாமல் போயிருப்பதாகும்.



உண்மையில், இது தமிழ் சூழலில் இடம்பெற்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்ற வகையில் இந்த வீதி நிர்மாண்த்துக்காக இங்குள்ள மக்களின் நிதி மூலதனம், மனித ஊழியம் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அதனூடாக இங்குள்ள கணிசமான இளைஞர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது தமக்கான நாளாந்த, மாதாந்த ஊதியமொன்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியிருக்கும் என்பதுடன் இதற்கான ஒப்பந்த பணிகள் மூலம் கணிசமான பணப்புழக்கத்துக்கான வாய்ப்பும் தமிழ் சூழலில் சாத்தியமாகி இருக்கும்.

இதனையொட்டி, இதற்கான வாகனாதிகள் தொழில் நுட்ப உபகரணங்களை தருவித்துக் கொண்டு இதனை சார்ந்து புதிய தொழிற்துறைகள் வடக்கே தோற்றம் பெறுவதற்கும் வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்த வாய்ப்புக்கள் யாவும் மறுதலிக்கப்பட்டிருக்கின்றன.

மறுபுறத்தில், இந்த வீதிகள் நிர்மாணத்தையொட்டிய பிந்திய நிலைமைகளாக வடக்குக்கான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் புதிய பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

உண்மையில் வெளிமாவட்டங்களுடனான தொடர்பாடலை வலுப்படுத்தியிருக்கும் இந்த வீதிகள் நிர்மாணம் வடக்கின் பயிர்த்தொழில், மற்றும் ஏனைய உற்பத்திகளுக்கான பரந்த சந்தைக்கு வழியை திறந்து விடுவதாக அமைந்திருக்க வேண்டும். மாறாக, தென்னிலங்கை உற்பத்திகளுக்கான சந்தையாக வடக்கை மாற்றியமைப்பதில்தான் முடிந்திருக்கிறது.

இதன்விளைவு, பிறமாவட்டங்களின் உபஉணவு மற்றும் நானாவித உற்பத்திகள் குடாநாட்டு தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகளின் உற்பத்திகளுக்கு உரிய சந்தை விலை கிடைப்பதை மட்டுப்படுத்தியிருக்கின்றன.

கூடவே புடவை, மின்சார உபகரணங்களின் விநியோகம், வாகன இறக்குமதி மற்றும் உதிரிப்பாகங்கள் விநியோகத்தில் யாழ். வர்த்தகர்களின் முன்கையெடுப்பை தென்னிலங்கை வியாபாரிகளின் தலையீடுகள் மட்டுப்படுத்தியிருக்கின்றன.

குடாநாட்டின் உற்பத்தி, விநியோக மார்க்கங்கள் வளர்ச்சி பெறாத ஒரு சூழலில் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் நடப்பில் இருந்த தமிழ் முயற்சியாளர்களின் குறைந்த பட்ச சந்தை வாய்ப்புக்களையும் குழப்பிவிட்டிருக்கின்றன என்பதே உண்மையான நிலைமையாகும்.

இந்த நிலைமை தமிழ் சூழலின் உள்ளூர் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்களின் வருமான முயற்சிகளை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கின்றது என்பதுடன் மத்தியில் அரசை நோக்கி தமிழ் சூழல் சாதகமாக நோக்குவதற்கான நிலைமைகளையும் பாதித்து விட்டிருக்கிறது.

இதனை விட எரிபொருள் விலையேற்றம், இடைத்தர உபகரணங்களின் அதிகரித்த செலவினங்களால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் வடக்கின் விவசாயம், கடற்றொழில் முயற்சிகளுக்கு நிவாரணங்கள், மானியங்களை வழங்கி முயற்சியாளர்களை ஊக்குவிப்பதை போருக்கு பிந்திய அமைதிச் சூழலில் போதுமான அக்கறை வெளிப்படுத்தப்படவில்லை.

அபிவிருத்திக்கான பாதையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் இந்தப் புதிய நெருக்கடியை சரியான தீர்வு முயற்சிகளை நோக்கி அக்கறை கொள்ளும் மாற்றுச் சிந்தையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அநேகமாக, தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே!

# சிங்கப்பூர் கனவின் பின்னால்...

நேற்று, எங்கள் ஊர் பக்கத்திலிருந்து ஒரு இளைஞன் இங்கே சிங்கப்பூருக்கு வந்திருந்தான். வீட்டிலிருந்து கொடுத்துவிட்ட சில பொருட்களைத் தருவதற்காக, இங்கே என் வீட்டுக்கு அருகிலுள்ள எம்.ஆர்.ஐ., ஸ்டேஷனிலிருந்து போன் செய்தான். நான் அடையாளத்திற்காக, "என்ன கலர் சேர்ட் போட்டிருக்கிறாய்..." என்று கேட்டேன். தடுமாறிவிட்டு, "டி-சேர்ட்" என்றான்.

"அடப்பாவி, அதுதான் என்ன கலர்?" என்றேன். "பக்கவாட்டில் கோடுகள் போட்டிருக்கும்..." என்றதும், "கலரை சொல்லு..." என்றேன். "வந்து... அக்கா... உங்களுக்குத் தெரியாதது இல்லை. எனக்கு கலர் ப்ளைண்ட்னஸ்..." என்றான். மேலும், "நான் போட்டிருப்பது கறுப்பு என்று நினைக்கிறேன்..." என்றான். எனக்குப் பேச்சே வரவில்லை.

சே... கேலி பண்ணியதுபோல் ஆகிவிட்டதே! சரி, நம் ஆடையின் நிறத்தையாவது சொல்வோம் என்று நினைத்து, பிறகு நல்ல வேளை, சொல்லாமல் மண்டையில் தட்டிக் கொண்டேன்.

ஒரு வழியாக அவனை கண்டுபிடித்த போது, அவன் போட்டிருந்த சேர்ட் நிறம் - நீலம்! எனக்கு அவன் பேசியதெல்லாம் காதில் விழாமல், நீல நிறத்திலேயே மனசு பூராவும் நின்றிருந்தது; விக்ரம் நடித்த "கிங்" படம் ஞாபகம் வந்தது. அந்தப் படத்தைப் பார்த்தபோது, உலகத்திலேயே அந்தக் கதாபாத்திரத்துக்கு மட்டும் தான் இப்படி நோய் என்று நினைத்தேன்.

அவன், எலக்ட்ரிகல் அண்ட் எலக்ட்ரோனிக்ஸ், "டிப்ளோமா" படித்திருக்கிறான். அவனுடைய இந்தக் குறைபாட்டால், எலக்ட்ரிகல் வேலையே பார்க்கக் கூடாது என்று சிங்கப்பூர் அரசு சொல்லி விட்டது.

நம் நாட்டில் இதையெல்லாம் பரிசோதிப்பது இல்லை; இங்குதான் பரிசோதிக்கின்றனர். இப்போது அவன் வேலை - தெரு விளக்குக் கம்பங்களுக்காக குழி தோண்டுவது.

இவன் மட்டுமல்ல... எந்தக் குறையுமில்லாது, நன்கு படித்த நம்



– ஸ்ரீ –

இளையர்கள் (சிங்கப்பூரில் இளைஞர்களை இப்படித்தான் சொல்கின்றனர் டீன்-ஏஜை, பதின்ம வயதினர் என்கின்றனர்) எண்ணற்றோர் இப்படித்தான் இங்கே புல் வெட்டியும், மண் வெட்டியும் பிழைப்பு நடத்துகின்றனர்.

பத்தாவது மட்டுமே படித்த (இங்கே, "ஓ" லெவல்) சீனர்கள், புராஜெக்ட் மனேஜர்களாக நம்மவர்களை வேலை ஏவிக் கொண்டிருக்க, நம் ஐ.டி.ஐ.,களும், டிப்ளோமாக்களும் எட்டாம் வகுப்பு கூடத் தேவையில்லாத கூலி வேலைகளை, இறுகிப் போன உடல்களுடனும், மனதுடனும் செய்வது, இங்கே வாடிக்கையாக உள்ளது.

ஊரில் எனக்குத் தெரிந்த குமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற இளைஞன், "சிங்கப்பூரில் ஏதாவதொரு வேலை கிடைத்தால் போதும், எப்படியாவது பெரியாளாகி விடுவேன்..." என்று சொல்லிக் கொண்டிருப்பான். அங்கே சிவில் டிப்ளோமா முடித்து ஓட்டோ கேட் ஆர்க்கிடெக்சரியூட்டரியில் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவன்.

ஸ்கில் டெஸ்டில் தேர்வு பெற்று, இங்கு வந்து, ரோட்டில் கேபிள் இழுத்துக் கொண்டிருக்கிறான். கேபிள் இழுப்பது மிக மிகக் கடினம் என்று சொல்கின்றனர். இவர்களுக்கு கூலி மாதம் ஐநூறு வெள்ளியைத் தாண்டாது.

இப்போது அவன் சொல்கிறான்... "இங்க வாறதுக்கு கடன் வாங்கி ஏஜெண்டுக்குக் கட்டின ஐந்து இலட்ச ரூபாயை எப்படியாவது அடைத்துவிட்டு, ஊருக்கு ஓடிப்போயிட வேணும். அங்க போய் நல்ல வேலையில் சேர்ந்து பெரியாளாயிடுவேன்..."

இவர்களையெல்லாம் மினி லொறியில் அள்ளிப் போட்டு, வேலைத்தளத்துக்கு கொண்டு போவர். அப்போது யாராவது இளம் பெண்கள் கடந்து சென்றால், கைக்குட்டையால் முகத்தை மூடிக் கொள்வதாய் சொல்கிறான் குமார்.

சில நாட்களுக்கு முன், நான் வேலை செய்த சீன கம்பெனியில், இரண்டு கம்ப்யூட்டர்களை நிறுவுவதற்காக அதன் வேலைத்தளத்துக்குப் போனேன். ஹோர்டிங் வைத்து அடைத்திருந்த சதுப்பு நிலம் போன்ற அந்த இடத்தில், இருபுறமும் அதல பாதாளமாக வெட்டிக் கிடக்க, கற்களை வைத்து அமைத்திருந்த படிகளில் கை, கால் நடுங்க, இதயம், "திம் திம்"மென அதிர, மேற்கொண்ட பயணம், "த்ரில்"லானது.

ஆனால், அங்கே தொழிலாளர்களாக வேலை அனுமதிப் பத்திரத்துடன் இருக்கும் நண்பர்கள் படும்பாடு, "த்ரில்"லானது இல்லை. சிங்கப்பூரின் சுத்தம் பற்றி சிலாகிக்கிறோமே... வேலையிடத்திலேயே தங்கியிருந்த அந்த தொழிலாள நண்பர்களிடம் தண்ணீர் கேட்டேன். "இல்லை!" என்று சொன்ன அவர்கள், கடையில் வாங்கி வரக் கிளம்பினர். (அதற்கு அந்த அதல பாதாளத்தையெல்லாம் தாண்டிப் போகவேண்டும்!) "நீங்கள் எங்கே தண்ணீர் குடிப்பீர்கள்?" என்று கேட்ட போது, அவர்கள் காட்டிய இடம், கழிவறை!

சிங்கப்பூரின் நிமிர்ந்த கட்டடங்களும், சுத்தமும், இவர்களைப் போன்ற உழைப்பாளிகளின் வியர்வையில் உருவானது.

ஆச்சரியம் என்னவென்றால், இவர்கள் ஊருக்கு வரும்போது வாசனைத் திரவியங்களும், எலக்ட்ரோனிக் பொருட்களும் வாங்கிக்கொண்டு வருகின்றனரே தவிர, தங்கள் கவலைகளையோ, கஷ்டங்களையோ தங்கள் குடும்பத்திடம் காட்டுவதில்லை.

அதிர்ஷ்டம் இருப்பவர்களுக்கு வேலை நன்றாக அமையலாம் இல்லையெனில், கஷ்டம்தான். இங்கு வரும் முன் நன்கு யோசித்து விசாரித்து முடிவெடுக்க வேண்டும்.





# காதலர் தினம்

உலக காதலர்கள் கொண்டாடும் காதலர் தினம் குறித்து பல்வேறு சுவையான, தகவல்கள் கூறப்படுகின்றன.

valentine's day என்று உலகமெங்கும் கொண்டாடப்படும் காதலர் தினம் valentine பாதிரியாரின் நினைவாக கொண்டாடப்படுகிறது என்பது நம்பிக்கை. கி.பி 270ஆம் ஆண்டு ரோம பேரரசரான இரண்டாம் கிளாடியுஸ் காலத்தில் ஆண்கள் திருமணம் செய்து கொள்ள தடை இருந்தது. திருமணம் செய்து கொண்டால் ஆண்களுடைய வீரம் குறைந்து விடும் என்பது அரசரின் நம்பிக்கை. இதனால் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்று தடை விதித்திருந்தார் ரோமப் பேரரசர்.

திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை கொண்டாட துடித்தவர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கு அரச கட்டளையை மீறி திருமணம் நடத்திவைத்தார் வலன்ரைன் பாதிரியார். இந்த உதவிக்கு மன்னன் மரணதண்டனையை பரிசளித்தார். பாதிரியார் வலன்ரைன் கொல்லப்பட்ட நாள் பெப்ரவரி 14. காதலர் தினம் குறித்து உலவும் கதைகளில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள கதை இது.'



### சீனர்களின் காதலர் தினம்

சீனர்களின் காதலர தின கதை இது. சுவர்க்கத்தின் சக்கரவர்த்திக்கு ஏழு மகள்கள். ஏழாவது மகளான ஸி நூ அழகிகளுக்கெல்லாம் அழகி! பேரழகி. ஒரு நாள் ஏழு சகோதரிகளும் நதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நுவூ எனும் இளைஞன் அவர்களைப் பார்த்தான். குறும்புத் தனமாக எல்லாருடைய ஆடைகளையும் எடுத்துப் போய்விட்டான். ஆடைகள் இல்லாமல் வெளியே வரமுடியாமல் சகோதரிகள் தவித்தனர். கடைசியில் தங்கள் கடைசித் தங்கையான ஸி நூவை அவனிடம் சென்று ஆடை வாங்கி வர அனுப்பினார்கள். ஈரம் சொட்டச் சொட்ட எழிலுடன் வந்து நின்ற அவளைப் பார்த்தவுடன், நுவூ காதல் கொண்டான். இந்தக் காதல் திருமணத்தில் முடிந்தது. விஷயம் தெரிந்த மன்னர் இருவரையும் பிரித்து வானத்தின் இரண்டு மூலைகளில் கொண்டு போய் விட்டார். அவர்கள் ஏழாவது மாதத்தின், ஏழாவது நாளில் மட்டும் தான் சந்தித்துக் கொள்ள முடியும். அந்த நாள் தான் சீனர்களின் காதலர் தினம்.

### கிறிஸ்தவ விழா

பண்டைய காலத்தில் ரோமில் கொண்டாடப்பட்ட ஒரு விழா லூப்பர் கேலியா. இது பெப்ரவரி 13 முதல் பெப்ரவரி 15 வரை கொண்டாடப்படும். வாழ்க்கை வளமாக அமைய கடவுளை வேண்டும் விழா இது. ரோம் நகரில் ஆடல் பாடல் என அமர்க்களப்படும். இதனை கி.பி 490களில் போப் கெலேஷியஸ் தடை செய்தார். ஆனாலும் மக்கள் இதனை விடவில்லை. இந்த விழாவின் வீரியத்தைக் குறைக்கவும், ஒரு கிறிஸ்தவ விழாவின் மூலம் செயலிழக்கச் செய்யவும் போப் தீர்மானித்தார். எனவேதான் பெப்ரவரி 14ஆம் திகதியை புனித வலன்ரைன் நாள் என அறிவித்தார் என்றும் பலரால் நம்பப்படுகிறது.

### பிரியமானவர்களுக்குப் பரிசு

கிழக்கு இங்கிலாந்தின் நோர்போக் பகுதியில் வலன்ரைன்ஸ் தினத்தை சிறப்பாக கொண்டாடுகின்றனர். கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் தாத்தா வீடுகளில் பரிசு வழங்குவதைப் போல பிரியத்திற்குரியவர்களின் பின்வாசல் கதவைத் தட்டி இனிப்புகளை வைத்துச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. இவ்வாறு இனிப்புகளை வைப்பவர்கள் ஜேக் என்று அழைக்கப்பட்டனர்.

### இதயங்களின் தினம்

ஸ்வீடன் நாட்டில் இந்தநாளை "அனைத்து இதயங்களின் தினம்" என்று அழைக்கின்றனர். போர்த்துக்கல் நாட்டில் காதலர் தினத்தை "நமோரோடோஸ் டயாடாஸ்" என்று அழைக்கின்றனர். இதற்கு அர்த்தம் Boyfriend மற்றும் Girlfriend தினம் என்பதாகும். ஸ்பெயினில் இந்த நாளை சென் வலன்ரைன் என்று அழைக்கின்றனர்.


### நட்புக்கு மரியாதை

பின்லாந்து நாட்டில் இது காதலர்களுக்கான தினம் அல்ல. இந்த நாளை அவர்கள் "ஸ்டேவான்போபியா" என்று அழைக்கின்றனர். அதாவது இதற்கு நண்பர்கள் தினம் என்று பொருள். நண்பர்களாய் இருப்பவர்கள் இந்த நாளை விமரிசையாக கொண்டாடுகின்றனர். நண்பர்களுக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்புவதும், பரிசுகள் கொடுப்பதும் என இந்த நாளை சிறப்பாக கொண்டாடுகின்றனர். எங்கெங்கோ இருக்கும் நண்பர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி இந்த நாளை உற்சாகத்துடன் கொண்டாடுவது சிறப்பம்சம்.

### பிரேசில் நாட்டில்

பிரேசில் நாட்டில் பெப்ரவரி 14ஆம் திகதியை Holiday of sex என்று அழைக்கின்றனர். அவர்களுக்கு காதலர் தினம் வேறு தனியாக ஒருநாள் உண்டு. அது ஜூன் 2ஆம் திகதி அந்தநாளில் காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சொக்ளேற், பரிசு, முத்தம் என பரிமாறிக்கொள்வது வாடிக்கை





## என்னதான் பேசுவதோ

"சேது" தொடங்கி "அவன் இவன்" வரைக்கும் பாலாவிடம் உதவி இயக்குநராக இருந்தேன். "பிதாமகன்" படத்துக்குப் பின்புதான் "ஆச்சார்யா" படம் இயக்கினேன். அது எனக்குப் பெயர் பெற்றுத் தந்தது.

ஒரு டிவி செய்தியில் வெறும் ரூபா 21 இற்காக விற்கப்பட்ட ஒரு பெண் குழந்தை பற்றி காணநேர்ந்தது. 18 வயதில் வளர்ந்த நிலையில் அந்தக் குழந்தை பெற்றோரிடமே வந்தால் எப்படியிருக்கும் என அறிய ஆசைப்பட்டேன். அதுதான் இந்த "என்னதான் பேசுவதோ".

ஏதோ ஒரு விதத்தில் எல்லோருமே ஏதோ ஒரு விஷயத்துக்கு பொறுப்பாகி விடுகிறோம். பெண்மை, கற்பு, ஒழுக்கம் போன்ற கலாசார மதிப்பீடுகள் எல்லாம் இப்போது வேறு வேறு அர்த்தங்கள் பெற்று உருமாறி விட்டன. இன்னும் சில காலங்களில் எப்படி நடந்து கொள்வது, என்பது தெரியாமல் நாம் தூவிக்கப் போகிறோம். பெண்கள் உடலளவில் பலவீனமானவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு இங்கே எத்தனை பிரச்சினைகளை உண்டாக்கி விடுகிறது நம் சமூகம். இதனால் வரும் சொல்ல முடியாத தவிப்புகள் பெண் இனத்துக்கு ஏராளம். சிக்னலில் கார் துடைத்து விடும் சிறுமிக்குப் பின்னால் எத்தனை ரணமான கதைகள் இருக்கும்? நள்ளிரவில் பைக்கை மறிக்கும் விலை மாதுவுக்குப் பின்னால் ரம்மியமான ஒரு காதல் இருந்திருக்குமோ? நம்மால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் ஒரு புறம் என்றால், வறுமை, ஆதிக்க சக்திகளின் பணத்தால் சிதையும் மனங்கள். பெண்களுக்கு வரும் பிரச்சினைகள் எல்லாம் சரிவர களையப்பட இன்னும் தீர்க்கமான அரசியல் பார்வை இங்கே இல்லை.

உணர்வுபூர்வமான இந்த பெண் கதாபாத்திரத்தை யார் செய்வார்கள், இதற்கு யார் சம்மதிப்பார்கள் என்று கேள்விகள் இருந்தன. தக்ஷா நகர்க்கர். அந்தக் கேள்விகளுக்கு தக்க பதில்கள் தந்தார். நடிப்பதற்கான அத்தனை அர்ப்பணிப்புகளும் உள்ள நடிகை. எஸ்.ராமகிருஷ்ணனின் வசனங்கள் இன்னொரு பலம். மறுபக்கம் டி.இமான் - நா.முத்துக்குமார் கூட்டணியில் பாடல்களின் வரிகளும், இசையும் கை கோர்த்திருக்கிறது.

- இயக்குநர் 'ஆச்சார்யா' ரவி.

## இன்னும் அது கண்டு பிடிக்கப்படவில்லை!



"கொஞ்சம்தான் சாப்பிடுகிறேன். ஆனால் உடல் எடை குறைய மாட்டேன் என்கிறதே" என்று கவலைப்படுபவர்கள் அதிகம். கொஞ்சமாகச் சாப்பிடுகிறீர்களா? அதிகமாகச் சாப்பிடுகிறீர்களா? என்பதல்ல பிரச்சினை.


நீங்கள் சாப்பிடும் உணவில் எவ்வளவு கலோரிகள் அடங்கியிருக்கின்றன? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதிக கலோரி உள்ள உணவை சிறிது சாப்பிட்டாலும், உடல் எடை சட்டென்று அதிகமாகிவிடும். இப்போதெல்லாம் ஃபாஸ்ட் ஃபுட் கடைகளே கதியென்று கிடப்பவர்களும் அதிகமாகிவிட்டனர். அங்கே பொரிப்பதையும், வறுப்பதையும், மசாலாப் பொருட்களை அள்ளித் தூவுவதையும் பார்த்தாலே உடல் எடை அதிகரிக்க வாய்ப்புண்டு.

நாம் சாப்பிடும் உணவுப் பொருளில் எவை எவை அடங்கியுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள இப்போது ஒரு கருவி வந்துவிட்டது. கனடா நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ள டெல்ஸ்பிக் என்ற கருவிதான் அது. இந்தக் கருவியை உங்களுடைய செல்போனில் இணைத்துக் கொள்ளலாம்.

இந்தக் கருவியை உணவுப் பொருட்களின் முன்னால் காட்டினால், கருவியிலிருந்து குறைந்த ஆற்றலுள்ள கதிர்கள் உணவுப் பொருட்களின் மேல் பட்டு, அவற்றில் என்னென்ன சத்துகள் அடங்கியுள்ளன? எவ்வளவு கலோரிகள் உள்ளன? போன்ற தகவல்களைச் செல்போனில் குறுந்தகவல் வடிவில் அளித்துவிடுகிறது. எதைச் சாப்பிடலாம்? எதைச் சாப்பிடக் கூடாது? என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். இதெல்லாம் எதற்கு? நாக்கைக் கட்டிப் போடுவதற்கு ஏதாவது கருவி இருக்கிறதா? என்று கேட்கிறீர்களா? மன்னிக்கவும்... இன்னும் அது கண்டு பிடிக்கப்படவில்லை.

## இப்படியும் நடக்குமா?

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர், ரொப் கிலெட். இவருக்கு, 25 வயது தான் ஆகிறது. ஆனால், 17 மாதங்களுக்கு முன், இவரின் எடை எவ்வளவு தெரியுமா? 260 கிலோ. கண்ணில் தென்படும் உணவுகளை எல்லாம், வாயில் போட்டு, கிரைண்டர் போல், அரைத்து தள்ளி விடுவார். அப்படி ஒரு அகோரப் பசி இவருக்கு. இதனால், இந்த இளம் வயதிலேயே, கண்டபடி உடல் எடை எகிறி விட்டது. இவரை பார்ப்பவர்கள், "மாமிச மலை" என, கிண்டலடிக்கத் துவங்கினர். இதனால், வெளியில் வருவதற்கு வெட்கப்பட்டு, வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடந்தவருக்கு திடீரென, உடல் எடையை குறைக்க வேண்டும் என்ற வெறி ஏற்பட்டு, உணவு விஷயத்தில் கடும் கட்டுப்பாட்டை பின்பற்ற துவங்கினார். பல நாட்கள், பட்டினி கிடந்தார். இடைவிடாத உடற்பயிற்சியும் மேற்கொண்டு, 17 மாதங்களில், 76 கிலோவாக எடையை குறைத்து விட்டார். இப்போது, உடல் மெலிந்து அழகாக தோற்றமளிக்கிறார், கிலெட்.






# பட்டணத்தை அண்டிய பண்புமிகு கிராமமாம் கொக்குவில் பற்றிய ஓர் கண்ணோட்டம்.

கொக்குவில் யாழ்பாணத்தில் 4 கி. மீ (3 மைல்) தொலைவில் அமைந்துள்ள கிராமம்.கொக்குவில் என்ற சொல்லிற்கு இரு அர்த்தங்கள் உண்டு. கொக்கு என்றால் கரும்பு. இதனால் கொக்குவில் கரும்பு வில் என்று பொருள்படும். இரண்டாம் பொருள் வில் என்பது சங்க காலத்தில் குளம் என்று அர்தீப்படும். கொக்குவில் கொக்குகள் நிறைந்த குளம் உடைய ஊர் என்று பொருள்படும்.கொக்குவில் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமப் பிரிவில் உள்ள ஒரு ஊர் ஆகும். யாழ்ப்பாணம் – காங்கேசந்துறை வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 2 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது இந்த ஊர். இவ்வூருக்கு தெற்கு எல்லையில் யாழ்ப்பாண நகரும், வடக்கில் கோண்டாவிலும் உள்ளன. கிழக்குத் திசையில் திருநெல்வேலி அமைந்துள்ளது. காங்கேசந்துறை வீதி இவ்வூரைக் கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கின்றது.திருநெல்வேலிச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி வரும் வீதி, காங்கேசந்துறை வீதியைச் சந்திக்கும் இடமான கொக்குவில் சந்தி இவ்வூரின் மைய இடமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கியமான பாடசாலைகளில் ஒன்றான கொக்குவில் இந்துக் கல்லூரி இச்சந்திக்கு அண்மையிலேயே அமைந்துள்ளது.

கிராம சேவையாளர் பிரிவு :

J/121 கொக்குவில் வடகிழக்கு
J/122 கொக்குவில் கிழக்கு
J/123 கொக்குவில் தென்கிழக்கு
J/124 கொக்குவில் வடமேற்கு
J/125 கொக்குவில் மேற்கு
J/126 கொக்குவில் மத்திகிழக்கு
J/127 கொக்குவில் தென்மேற்கு
J/128 கொக்குவில் மத்திமேற்கு

## கொக்குவில் நாமகள் வித்தியாசாலை



இலங்கையின் வடபுல நகரமாம் யாழ்ப்பாணத்தின் கொக்குவில் கிராமத்தில் உள்ள பொற்பதி வீதியின் மேற்காக 'நாமகள் வித்தியாசாலை' அமைந்துள்ளது. அந்நாளில் இப்பகுதிச் சைவப்பிள்ளைகள் தங்கள் கல்வி வளர்ச்சிக்காக தூர இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்றுவந்தனர். இதனால் பிள்ளைகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் மேலிட்ட பெரியோர்கள் திரு.ஆறுமுகம் வைத்தியர் திரு.சின்னத்துரை ஆகியோரின் பெரு முயற்ச்சியால் 1934ஆம் ஆண்டளவில் உருவானதே இப் பாடசாலை ஆகும்.

## கொக்குவில் இந்துவின் சரித்திர பின்னணி



மதம் சார்ந்த பாடசாலை முறையின் கீழ் அடங்கிய பாடசாலைகளுள் ஒன்றாக இ. செல்லையா அவர்களின் வழிகாட்டலில் 1910ஆம் ஆண்டு கொக்குவில் இந்து கல்லூரி தாபிக்கப்பட்டது.

1926 கனிஷ்ட இரண்டாம் நிலை பாடசாலையாக மதிப்பீடு செய்யப்பட்டது

1940 சிரேஷ்ட இரண்டாம் நிலை பாடசாலையாக மதிப்பீடு செய்யப்பட்டது

1960இல் அரசாங்கம் கையேற்கும் வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இயக்குநர் சபையின் நிவாகத்தின் கீழ் இருந்தது.

1960இல் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட பின்னர் கல்லூரியின் பெறுபேறுகள் வளர்ச்சி கண்டதுடன் கால்பந்தாட்டம், துடுப்பாட்டம் மற்றும் சாரணியம் என்பன ஏனைய யாழ். மாவட்ட பாடசாலைகளுடன் போட்டி போடும் அளவுக்கு வளர்ச்சிகண்டது.

1961 அதிபர் பேரின்பநாயகத்தின் அயராத முயற்சியினால் முதலாவது இரண்டு மாடிக் கட்டடம் கட்டி திறந்துவைக்கப்பட்டது.

1972 கல்லூரியின் வடபகுதியில் உள்ள மூன்று மாடிக் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டது

1972 திரு. மகாதேவா அவர்கள் அதிபராக பொறுபேற்றார்

1980 திரு.அ. பஞ்சலிங்கம் அவர்கள் அதிபராக பொறுபேற்றார்.

1991 திரு.இ.மகேந்திரன் அவர்கள் அதிபராக பொறுபேற்றார்

1996 திரு. பொ . கமலநாதன் அவர்கள் அதிபராக பொறுபேற்றார். குறிப்பாக இவர் பௌதீக வளங்களை அதிகரிப்பதில் முனைப்பாகச் செயற்பட்டார்.

2004 மாணிக்கம் சுப்ரமணியத்தின் 13 மில்லியன் நிதியுதவியுடன் கல்லூரியின் தென் புறத்தில் 3 மாடி 100 ஆண்டு விழா மண்டபம் அமைக்கப்பட்டது

2004 கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு விழாக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

2005 முன்னைநாள் ஆசிரியர் சினத்தம்பி அவர்களின் நினைவாக அவரது பிள்ளைகளின் 20 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் மற்றுமொரு 3 மாடி கட்டடம் நிறுவப்பட்டது

2007 திரு. அ. அகிலதாஸ் அவர்கள் அதிபராக பொறுபேற்றார்

2008 இந்துக்களின் சமர் (BATTLE OF THE HINDUS) என வர்ணிக்கப்படும் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் சமர் உத்தியோக பூர்வமாகஆரம்பிக்கப்பட்டது

2010 இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் வளர்ந்துவரும் பாடசாலை கிரிக்கெட் அணிக்கான விருதினை வென்றது

## கொக்குவில் மேற்கு CCTM தமிழ்க் கலவன் பாடசாலை



1865ஆம் ஆண்டு கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் இலங்கை திருச்சபையால் தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. அக்காலப்பகுதியில் அவர்களாலேயே இந்தப் பாடசாலையும் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. அப்போது கொக்குவிலில் மூன்று இடங்களில் CCTM பாடசாலை தொடக்கப்பட்டது. பின்பு காலப் போக்கில் ஒன்று கொக்குவில் இராம கிருஷ்ண மிஷன் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களின் இலங்கை திருச்சபை நிர்வாகத்திலேயே இப்பாடசாலைகள் இயங்கின.

## கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா


ஏரம்பு சுப்பையா (ஜனவரி–11– 1976) இலங்கையின் புகழ் பெற்ற நடன ஆசிரியர்களில் ஒருவர். கொக்குவில் கலாபவனம் நாட்டியப் பள்ளியின் அதிபர்.

வாழ்க்கைச் சுருக்கம்


யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்தவர் அண்ணாவியர் கதிர்காமர் ஏரம்பு. 1949இல் கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா பூரணம் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அதன் பின்னர் 1956இல் கொக்குவிலில் கலா பவனம் என்ற கலைக்கோயிலை உருவாக்கி கலை உலகில் மாபெரும் சாதனையை நிலைநாட்டியதுடன் பலருக்கு அரங்கேற்றமும் செய்து வைத்தார். இவர் தனது பரம்பரையின் ஆரம்பத்தில் கலையிலிருந்த ஈடுபாடு காரணமாக கூத்து வடிவத்தில் காவடி, இசை நாடகம் போன்றவற்றை நடாத்தினார். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இந்தியக் கலைஞர்களை வரவழைத்து தாயகம் முழுவதும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தினார்.



அக்காலத்தில் பரத நாட்டியம் பெரிதாகப் பிரபல்யம் அடைந்திருக்கவில்லை. அது ஒரு சமூகத்தின் சொத்தாக மட்டுமே இருந்தது. இருந்தாலும் காலப்போக்கில் பாரதத்தில் ஏற்பட்ட சமூக சீர்திருத்தத்தின் காரணமாக சதிர், சின்னமேளம் என வழங்கி வந்த நடனம் பரதம் என்ற பெயருடன் புதுப் பொலிவு பெற்றது. அதற்கு ஈ . கிருஸ்ண ஐயரும், ருக்மணிதேவி ஆகியோரின் பங்களிப்புமே காரணம். அதன் தாக்கம் இலங்கையிலும் பரவத் தவறவில்லை. இந்திய நடனக் கலைஞர்களின் வருகையினால் உள்ளூர்க் கலைஞர்கள் விழித்தெழுந்தார்கள். அதன் தாக்கமே திரு. ஏரம்பு அவர்கள் தனது மகனான சுப்பையா அவர்களை 1946இல் தமிழகத்திற்கு அனுப்பி பரத நாட்டியத்தை திருச்செந்தூர மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடமும், கதகளியை நடனக் கலாநிதி குரு கோபிநாத் அவர்களிடமும் சீரிய முறையில் கற்க வழி சமைத்தார்.







# வியாபார உரிமம் எதுவுமின்றி கண்ணாடி வண்டிகளில் வியாபாரம்

## விசனமடையும் பொதுமக்கள்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதிகள் பலவற்றில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் தின்பண்டங்கள் விற்பனை செய்யும் கண்ணாடி வண்டில்களுக்கான வியாபார உரிமத்தை அவற்றின் உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வண்டில்களில் விதவிதமான தின்பண்டங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, ஏ-9 வீதி மற்றும் பல முக்கிய உள்ளூர் வீதிகளின் பல இடங்களிலும் இக் கண்ணாடி வண்டில்களில் தின்பண்டங்கள் வியாபாரம் நடைபெறுகிறது.

வியாபாரத்தில் ஈடுபடும் அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் இவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது விதி முறையாகும். இருந்தும் அதிகளவிலான கண்ணாடி வண்டில்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிய வந்துள்ளது. சுகாதாரப் பகுதியினரின் மருத்துவ சான்றிதழும் இவர்களிடம் இல்லை.

அத்துடன் இவ் வண்டிகளின் சுகாதார நடைமுறைகளும் திருப்தியாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அழுக்கடைந்த இடங்களிலும், கழிவு நீர் வடிந்தோடும் வாய்க்கால்களுக்கு அருகாமையிலும் இவ் வண்டிகளின் வியாபாரம் தொடர்கிறது.

அந்தந்த இடங்களில் வைத்து காஸ் மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புக்களின் மூலம் உடனுக்குடன் தின் பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஏற்கனவே பாவிக்கப்பட்ட எண்ணெய், தரக் கழிவான உணவுப்பொருட்கள், பழுதடைந்த கடல் உணவுகள் சில வண்டில்களில் பாவிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன்களை முக்கியத்துவப்படுத்தி சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுகாதாரப் பகுதியினர் பலவகை தின் பண்டங்கள் விற்பனை செய்யும் இக் கண்ணாடி வண்டில்கள் மீது உரிய கவனம் செலுத்த வேண்டும். எனப் பலராலும் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (137)

# இந்து வாலிபர் சங்கத்தால் குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி

(மானிப்பாய்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வன்னிமாவட்டத்தில் வசிக்கின்ற இரண்டு குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி உதயநகரினைச் சேர்ந்த அ.அருளதாசன் என்பவரின் சுயதொழில் முயற்சிக்காக முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான ஐம்பது பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவு வள்ளிபுனத்தைச் சேர்ந்த செல்வராணி என்பவரின் சுயதொழில் முயற சிக்காக கோழிவளர்ப்பிற்கென இருபத்தையாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தினால் இதுவரை நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேற்படி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கதினால் மேற்கொள்ளப்படும் சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக்கான நிதியுதவிகளை வட்டு இந்துவாலிபர் சங்க அங்கத்தவர்கள் முன்னாள் சங்க அங்கத்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் வழங்கிவருவதாக வட்டு இந்து வாலிபர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (54)

வெள்ளி நற்சிந்தனை...



# அழகு எது?

தமிழ் மூதாட்டி ஔவையார் பலருடைய வினாக்களுக்கு சிறந்த முறையில் பதில் கூறிப் புகழ் பெற்றவர். ஒரு சமயம் சோழ மன்னன் ஔவையாரிடம், உலகில் அழகியவை எனக்கூறப்படுபவை யாவை? என வினா எழுப்பினான்.

“ஓர் இளம் பெண் தன் நாயகனோடு கூடி வாழ்ந்து இன்புற்று மகிழ்கின்றாள். இறுதியில், அவர்கள் களைத்துப்போய் விடுவார்கள். அப்பொழுது, இன்பக்கிளர்ச்சியிலே மலர்ந்த தளர்ச்சியும் அவள் பால் தோன்றும் அப்படித் தோன்றும் பெண்மையின் பொலிவான நிறைவான அழகு இருக்கிறதே, அதுதான் இல்வாழ்வார் போற்றும் சிறந்த அழகாகும்.

“இறைவனை நாடிப் பணிந்து போற்றும் பக்தி உடையவர், விரதங்கள் பலவற்றையும் தம்முடைய உள்ளத் தூய்மையினைக் கருதியே மேற்கொள்வார்கள் அவர்கள். அதனால் மெலிதலும் கூடும். அங்ஙனம், இளைத்துத் தோன்றுகின்ற மேனி, இறை பக்தி உடையவர் மனமுவந்து போற்றும் அழகாக விளங்கும்.

வறியவர்களுக்கு உதவுவது மிகச்சிறந்த பண்பாகும் உதவி. உதவி ஒருவன் மிகவும் பொருள் குறைந்தவனாகவும் போரினால் அவனுடைய அந்தப் பொருள் குறைந்த நிலையும் சான்றோர்க்கு மிகமிக அழகியதாகவே தோன்றும். இதன்றிக்கஞ்சப்பிரபுவின்வளத்தை அவர்கள் அழகிது என்று ஒருபோதும் கருதுவதில்லை.

வீரனுக்கு அழகு போர்க்களத்தில் தான் அடைந்த விழுப்புண்ணாக இருக்கும். கொடிய களத்தில் போர் செய்து பெற்றவடு பெறற்கரிய பேறாகக்கருதி மதிக்கவும்படும். வடுபட்ட உடலை எண்ணாது அதனை அழகியதாகக் கருதுவதே சான்றோர் இயல்பு.

சிலர் பொது நன்மைக்காகப் போராடுகிறார்கள். அவர்களின் போராட்டத்தில் வெற்றியும் பெறுகின்றனர். ஆனால் அவர்களுள் சிலர் களத்தில் உயிர் இழக்கின்றனர். அவர்கள் நினைவாக அவர்களுடைய பீடும் பெயரும் பொறித்த நடுகற்கள் நினைவுத் தூபிகள் நிறுத்தப் பெறுகின்றன.

தம் உயிரை தம்முடைய இனநன்மைக்காக ஈந்தவரின் நினைவாகிய அந்தத் தூபிகள் அந்த இனத்தவர் உள்ளவரை, அவர்கட்கு மிகவும் அழகியதாகவே இருக்கும்.

**சுரதந் தனில் இளைத்த தோகை;**
**சுகிர்த**
**விரதந் தனில் இளைத்த மேனி;**
**நிரதம்**
**கொடுத்திளைத்த தாதா;**
**கொடுஞ்சமரிற்பட்ட**
**வடுத்துறைத்த கல் அபிரா மம்.**

இவ்வாறு அழகு அவரவர் பண்புச் செயல்களால் அமையும் அழகெனப் பொதுப்பட ஒன்றைக் கவர்ச்சி இனிமை கருதி மட்டும் கூறுதல் பொருந்தாது. மனநிலையினை ஒட்டியும், செய்தவரின் சால்பினைக் கருதியும் அமைவதே அழகாகும் என்பதை உணர வேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

இந்த உலகத்தில் இதுவரைக்கும் திறக்காத ஒரு கதவைக் காதல் திறந்துவிடுகிறது. **– ஷேக்ஸ்பியர்**

ஒரு நாயைக் கூட எதுகை மோனையுடன் குரைக்கச் செய்து விடுகிறது காதல். **– ஜோன் பிளட்சர்**

காதல் அடைதல் உயிரியற்கை, அது கட்டுக்குள் அடங்கிடும் தன்மையதோ! **–பாரதிதாசன்**

காலமுற்றும் தொழுதிடல்வேண்டும் காதலென்பதோர் கோயிலின் கண்ணே **– பாரதி**

அவர்கள் என்னைக் கல்லால் அடிக்கவில்லை. அவள் அழகிற்கு ஏற்றவனாகச் செதுக்குகிறார்கள். **– கஜல்**

காதல் போல் போற்றத் தகுந்த உணர்ச்சியும் நமக்கில்லை. காதலிப்பது போல் பெருங்குற்றமும் நமக்கில்லை. **– கவிதாசரண**

இரு புதிய மனிதர்களுக்கு ஒருவரையொருவர் பூரணமாக குவதற்காக ஒரு விந்தையான தவிப்பு உண்டாகிறதே, அதன் பெயர்தான் காதல். அது மலர்மாலை அன்று; நெருப்புப்பொறி. **– காண்டேகர்**

காதலிக்காமல் இருப்பதைவிட ஒரு தடவையாவது காதலித்து அதை இழப்பதே மேல். **– டென்னிசன்**

நாம் அனைவரும் காதலுக்காகத்தான் பிறந்தோம். வாழ்வின் ஆரம்பம் அதுதான். வாழ்வின் முடிவும் அதுதான். **– டிஸ்ரேலி**

காதல் – மனித வாழ்வின் நித்தியமான அறங்களில் ஒன்று. அது வரும்போது, அதைச் சாத்தி வைக்கும் கதவுகள் இதுகாறும் இல்லை. காதல்கள் அகப்பொருள் இலக்கணம் படித்துவிட்டு வருவதில்லை. குளம் ஆறு கடல் சமதளம் எங்கும் பெய்துவிட்டுச் செல்லும் மழை அது. ஜூலியட்டுக்கு அது திடும் எனத் தோன்றும் மின்னல். அம்பிகாபதிக்கு நெருப்பு [‘உருகி, உடல் கருகி, உள்ளீரல் பற்றி எரிவது அவியாது என் செய்வேன். வரி அரவ, நெஞ்சிலே தோய்த்த நளினவிழிப் பெண் பெருமாள், நெஞ்சிலே இட்ட நெருப்பு...’]. மஜ்னுவான கயஸுக்கு மரண தாகம். அது பிறப்புச் சான்றிதழ் பட்டதல்ல. வர்க்கமும் வயதும் சாராது வீசும் பொதுக்காற்று அது. காதலில் காதல்தான் இருக்கிறதே தவிர கள்ளக் காதல், வெள்ளைக் காதல் இல்லை. **– பிரபஞ்சன்**

உலகம், இதுகாறும் சந்தித்த உயிர்க்கொலைகள், இதுகாறும் நடந்த யுத்தங்களால் நிகழவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் உலக யுத்தங்களாலும் கூட அது நிகழவில்லை. மாறாக, மனம் உடைந்த காதலர்களின் மரணமே எண்ணிக்கையில் மிக அதிகமானது. **– ஓஷோ**

காதல் தரும் எல்லையற்ற கடுந்துயரம் எனக்குப் பிரியமானது. என் காதலைப் போன்றதுதான் மரணம் என்றால் நான் செத்துப் போகத் தயார். **– புஷ்கின்**

காதல் அல்லாதது எதுவும் என்னைத் திருப்தி செய்யாது. **– கீட்ஸ்**

என் காதலால் உனக்கு எவ்விதத் தொல்லையும் உண்டாகாத வண்ணம் உன்னை நான் அப்படிக் காதலிப்பேன். இணைபிரியாது எந்நேரமும் உன்னுடன் ஒட்டிக்கொண்டு ஓர் இதயம் இயங்குகிறது என்பதைத் தவிர. **– டொஸ்ரோயெவ்ஸ்கி**


என் கண்ணே– நான் இன்னும் உன்னைக் காதலிக்க ஆரம்பிக்கவே இல்லை. அதற்குள் மறைந்துவிட்டாயே! **– காதலியின் கல்லறை முன் சல்வடோர் டாலி**

லட்சக்கணக்கான ஆண்டுகள், கோடிக்கணக்கான மனிதர்கள், சுமந்த காதலை, நான் ஒருவனே சுமக்கும்படி ஆகிவிட்டது. **– முகுந்த் நாகராஜன்**

புதுவோன் பின்னைப் போனது என் நெஞ்சம் இதுவோ அன்னாய்! காமத்து இயற்கை? **– சாத்தனார்**

எப்போதுமே “நான் உன்னைக் காதலிக்கிறேன்” என்று சொல்வதற்கு இவ்வளவு தரம் தான் சொல்லவேண்டும் என்ற விதி இருந்ததில்லை. **– லென்னி புரூஸ்**

## போத்தல் தண்ணீரின் விலையை கட்டுக்குள் கொண்டுவர தீர்மானம்



(கொழும்பு)

சந்தைகளில் விற்கப்படும் குடி தண்ணீர்ப் போத்தல்களின் விலையை கட்டுப்பாட்டு விலைக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

குடிதண்ணீர் போத்தல்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது தொடர்பாக போத்தல் தண்ணீர் தயாரிப்பு நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளது.

சந்தைகளில் பல்வேறுபட்ட விலைகளில் போத்தல் தண்ணீர் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கடல்வழி போதைப் பொருள் தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

கடல் வழியாக மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் கடத்தல் வர்த்தகத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக போதைப் பொருட்கள் கடத்தப்படுவதனைத தடுக்கும் வகையில் விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட உள்ளதாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## வருடாந்தம் அதிகரித்துச் செல்லும் உல்லாசப் பயணிகளின் வருகை



கடந்த வருடம் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 32.6 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும், இதிலும் சீனாவிலிருந்து வருகை தந்த உல்லாசப் பயணிகளே அதிகமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

உல்லாசப்பயணத் திணைக்களததின் தகவல்களின்படி கடந்த ஜனவரி மாதம் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 575 பேர் வருகை தந்திருந்தனர். எனி னும் கடந்த 2013 ஜனவரிமாதம் ஒரு இலட்சத்து பத்தாயிரத்து 543 பேர் வருகை தந்தனர்.

கடந்த 2013 ஜனவரி மாதம் சீனாவிலிருந்து 3328 பேர் வருகை தந்திருந்தனர். எனினும் கடந்த ஜனவரி மாதம் சீனர்களின் வருகை 10,779 ஆக அதிகரித்துள்ளது. இது 223.9 வீத அதிகரிப்பென இலங்கையின் உல்லாசப் பயணத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதம் வடக்கு அமெரிக்காவிலிருந்து 6909 உல்லாப் பயணிகள் வருகைதந்துள்ளனர். இது 22.4 வீதமாகும். ஜனவரி மாதத்தில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்தோரின் எண்ணிக்கை 31.5 வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் கனடாவிலிருந்து 12.7 வீதமானோர் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை மேற்கு ஐரோப்பாவிலிருந்து 46 ஆயிரத்து 301 பேர் ஜனவரி மாதத்தில் வருகை தந்துள்ளனர். இது 17.9 வீத அதிகரிப்பாகும். அத்துடன் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 24 ஆயிரத்து 837 வருகை தந்துள்ளனர். இது 63.6 வீத அதிகரிப்பாகும். ரஷ்யாவிலிருந்தே அதிகூடியவர்கள் வந்துள்ளனர். இதன்படி 10 ஆயிரத்து 700 ரஷ்ய உல்லாசப் பிரயாணிகள் வருகை தந்துள்ளனர். இது 91.6 வீத அதிகரிப்பாகும்.

இதனிடையே மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து 9.7 விதமானவர்கள் அதாவது 6842 பேர் வருகை தந்துள்ளனர். எவ்வாறெனினும் இலங்கைக்கு கடந்த ஜனவரி மாதம் வருகை தந்த உலலாசப் பயணிகளில் பெருமளவானோர் தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களெனவும், இது 14.6 வீதமென்பதுடன் 28 ஆயிரத்து 392 பேர் வருகை தந்துள்ளனர். எனினும் இந்தியாவிலிருந்து வருகை தந்தோர் 5.6 வீதமாகவே அதிகரித்துள்ளதுடன் அந்தத் தொகை 17 ஆயிரத்து 886 ஆக உள்ளது

இலங்கை உல்லாசப் பயணத்திணைக்காளம் கடந்த வருடத்தை 1.2 மில்லியன் உல்லாசப் பயணிகள் இலக்காக நிர்ணயித்திருந்தது.

எனினும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உல்லாசப் பிரயாணிகளின் வருகை 2013 ஆம் ஆண்டு முதல் 11 மாதத்திலும் 26.7 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன் 1.23 பில்லியன் அமெரிக்க பொலர் வருமானமாகவும் கிடைததுள்ளது. எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 2.5 மில்லியன் உல்லாசப் பயணிகளின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேங்காய்ப் பால்மாவிற்கு கிராக்கி

### அமைச்சர் ஜகத்புஸ்பகுமார தெரிவிப்பு

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய்ப் பால்மாவிற்கான கேள்வி உலக சந்தையில் அதிகரித்துள்ளதனை அடுத்து, கடந்த வருடம் இதன் ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் தேங்காய்ப் பால்மாவின் ஏற்றுமதி 41 வீதத்தினால் அதிகரித்துள்ளது கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து-நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் தேங்காய்ப்பால்மாவின் ஏற்றுமதி 7686 மெற்றிக்தொன்னாக இருந்தது ஆனால் 2013 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் அது 11549 மெற்றிக் தொன்ன்ாக அதிகரித்துள்ளது

இதன்படி கடந்த 2012 ஆம் ஆண்டு தேங்காய்ப் பால்மாவின் ஏற்றுமதி மூலம் 1444 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டது. ஆனால் 2013 ஆம் வருடம் இது 2030 மில்லியனாக அதிகரித்துள்ளது. இலங்கை தேங்காய்ப் பால் மாவிற்கு உலக சந்தையில் பெரியளவான கேள்வி உள்ளது. குறிப்பாக பிரிட்டன், ஜேர்மன், அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் குவைத் ஆகியநாடுகளிலேயே அதிகளவான கேள்வி உள்ளது.

தென்னை உற்பத்திப் பொருட்களின் மூலமாக வருடாந்தம் 47 பில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்படுகிறது. சுமாராக 35 தென்னை உற்பத்திப் பொருட்கள் உள்ளூரில் தயாரிக்கப்படுகின்றன. உலக சந்தையில் ஆரம்பத்தில் கேள்வி கூடுதலாக ஏற்படக் காரணம், தரமான உற்பத்தியே ஆகும்.

தென்னை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் கேள்வி குறைவாக இருந்தமைக்கு அதிலிருந்த சில குறைபாடுகளே காரணமாகும். எனினும் தெங்கு அபிவிருத்தி அமைச்சின கீழ் இந்தக் குறைபாடுகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டதனை அடுத்து கேள்வியும் அதிகரத்துள்ளதுடன் அதனால் பெறபபடும் இலாபமும் அதிகரித்துள்ளதாக அமைச்சர் ஜகத்புஸ்பகுமார மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் காணி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு கணனிகள்



(கிளிநொச்சி)

வடக்கில் காணி தொடர்பான நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு கனணிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் காணி காணி அபிவிருத்தி அமைசசர் ஜனக பண்டார தென்னக்கோன் அவர்களினால் இக் கணனிகள் அரச அதிபர்கள் மற்றும பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி காணி தொடர்பான பிணக்குகளை இலகுவாக தீர்த்து வைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்த பரிந்துரைகளின் முதலாவது வருட செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்த மீளாய்வு கலந்துரையாடலின் போதே இக்கணணிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலகங்களுக்கும் மற்றும் இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களுககுமாக 12 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. (29)

## ஜனாதிபதி தலைமையில் நிர்வாக·சேவை பொன்விழா



இலங்கை நிர்வாக சேவையின் பொன்விழாக் கொண்டாட்டம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதென இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் தலைவரும் கொழும் மாவட்ட அரசாங்க அதிபருமான எச்.டி கமல் பத்மசிறி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-


கடந்த மேமாதம் தொடக்கம் இன்று வரையில் நாட்டின் 9 மாகாணங்களின் நிர்வாக அதிகாரிகளை அழைத்து கடந்த 50 வருடங்களுக்கு அப்பாற்சென்று நிர்வாகசேவையை எவ்வாறு காணலாம் என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டோம். அதற்கமைய அனைவருடைய கருத்துக்களும் சேகரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை எதிர்வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

எமது நிர்வாகசேவைக்கு நீண்ட வரலாறுள்ளது. 21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இருக்கும் எமது நிர்வாக சேவையானது தற்போதைய காலத்திற்கு ஏற்றாற் போல அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாகசேவையிலிருந்து ஓய்வு பெற்ற மற்றும் பணியிலுள்ள சுமார் 3000 பேரை இணைத்து இந்த பொன்விழா கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வின் விசேட உரையை ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க நிகழ்த்தவுள்ளார். மேலும் சர்வதேச நிர்வாகங்களில் உள்ள மாற்றங்கள் தொடர்பான உரையினை ஆற்றுவதற்கு மலேசிய நிர்வாக சேவையில் அனுபவம் மிக்க உயரதிகாரி அருராசப்பன் அழைக்கப்பட்டுள்ளார் என்று கூறினார்.

## பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு உதவித் திட்டம்

### சமூகசேவைகள் அமைச்சு யோசனை



(கொழும்பு)

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய உதவித் திட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக புதிய கொள்கை திருததங்களை கொண்டுவருவது பற்றி ஆராய்ந்துவருவதாக சமூக சேவைகள் அம்மச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் காவல்துறையினர் தொடர்ந்தும் பிச்சைக்காரர்களை கைதுசெய்துவருகின்ற சூழ்நிலையில், பிச்சைக்காரர்களின் மறுவாழ்வுக்காக அரசிடம திட்டம் ஏதும் இல்லையா என்று பி.பி.சி தமிழோசை வினவிய போதே சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் இவ்வாறுதெரிவித்தார்.

சமூகசேவைகள் அமைச்சின் உதவித்திட்டத்தில் பிச்சைக்காரர்களுக்கு உதவுவதற்கான வழிமுறைகள் இல்லை. உடல் அங்கவீனமானவர்கள், 70 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் மற்றும் தனித்துவிடப்பட்ட பெற்றோருக்கு மட்டுமே உதவக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றன.

இந்த சூழ்நிலையில், வறுமையால் வாடி, அநாதரவான நிலையில் தெருவுக்கு பிச்சைக்காரர்களாக வருவோருக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியது அரசின் கடமையல்லவா என்று தமிழோசை சமூக சேவைகள் அமைச்சிடம் சுட்டிக்காட்டியது.

இதற்குப் பதிலளித்த இமெல்டா சுகுமார், எதிர்காலத்தில் பிச்சைக்காரர்களுக்கும் உதவக்கூடிய விதத்தில் தமது திட்டங்களை வகுக்க அமைச்சரவை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானம்** 34 T I

1) காபோவைதரேற்றின் சமிபாட்டு இறுதி விளை பொருள்
1) கொழுப்பமிலம், கிளிரரோஸ் 2) சுக்குரோசு
3) குளுக்கோசு 4) அமினோ அமிலம்

2) குளமொன்றில் வாழும் எல்லாத் தாவர விலங்கு குடித்தொகையும் ஒன்றாகக் கருதினால்
1) இனம் எனப்படும் 2) சாகியம் எனப்படும்
3) சூழல் தொகுதி எனப்படும் 4) ஒன்றியவாழிகள் எனப்படும்

3) சுகதேசி ஒருவரின் சிறுநீரில் காணப்படாத பதார்த்தம்
1) குளுக்கோசு 2) குருதிக்கலம்
3) யூரியா 4) உப்பு

4) தாவரமொன்றின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன
- பூக்கள் தோன்றாது, • வித்துக்கள் உருவாகும்
- வித்து வித்துறையால் மூடப்பட்டிருக்கவில்லை

மேலுள்ள இயல்புகள் கொண்ட தாவரம்
1) சைக்கஸ் 2) இஞ்சி 3) பன்னம் 4) ஈரப்பலா


5) வாழுகின்ற இடத்திற்கு ஏற்ப தாவரங்கள் பல்வேறு இசைவாக்கங்களை காட்டுகின்றன. கடற்கரையில் படர்ந்து வளரும் இவ்வாறான இசைவாக்கங்கள் எவ்வகையான சூழலில் வாழ்வதற்கானது?
1) அதிக சூரிய ஒளி 2) அதிக காற்று
3) மண்ணில் அதிக உவர்த்தன்மை 4) நீரைத் தேக்கி வைக்காத மண்

6) சுவாசப்பைச் சுற்றோட்டத் தொகுதியில்
1) இதயத்திலிருந்து ஒட்சிசனேற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும்
2) இதயத்திலிருந்து ஒட்சிசனேற்றப்படாத குருதியைக் கொண்டு செல்லும்
3) இதயத்திற்கு ஒட்சினேற்றப்பட்ட குருதியைக் கொண்டு வரும்
4) ஒட்சிசனேற்றப்பட்ட குருதியை தொகுதிப் பெருநாடி கொண்டு செல்லும்

7) மனிதக் காதில் உள்ள கட்டமைப்புகளும் அவற்றின் தொழில்களும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள கட்டமைப்புகளுக்கு பிழையாக குறிக்கப்பட்டுள்ள தொழில்


| கட்டமைப்பு | ஆற்றும் தொழில் |
|---|---|
| 1) ஊத்தேக்கியாவின் குழாய் | நடுச்செவி, புறச்சூழலுக்கிடையிலான அமுக்கத்தை சமப்படுத்தும். |
| 2) செவிசிற்றென்புகள் | நடுக்காதின் வன்மையைப் பேணும் |
| 3) அரைவட்டக்கால்வாய் | உடலை சமநிலையில் வைத்திருக்க உதவும் |
| 4) நத்தைச்சுருள் | ஒலித்தூண்டல்களைப் பெறும் |

8) குருதிக்கலமொன்றின் முற்பக்கத் தோற்றத்தை, பக்கத் தோற்றத்தை அருகிலுள்ள படங்கள் காட்டுகின்றன. இக்கலத்தினால் ஆற்றப்படும் தொழில்





1) உடலினுள் புகும் கிருமிகளை விழுங்கும்
2) பிறபொருள் எதிரிகளை உருவாக்கும்
3) குருதியுறைதலுக்கு உதவும்
4) ஒட்சிசனை உடல் முழுதும் கொண்டு செல்லும்

9)




படத்தில் காட்டப்பட்டிருப்பது
1) ஆவியுயிர்ப்பை பரிசோதனை ரீதியில் காட்டுவதற்கான மாதிரி அமைப்பாகும். உறையில் சேர்ந்துள்ள நீர் உப்புக்கள் அற்றதாகும்.
2) ஆவியுயிர்ப்பை பரிசோதனை ரீதியில் காட்டுவதற்கான மாதிரி அமைப்பாகும் உறையில் உப்புக்கள் கலந்த நீர் காணப்படுகிறது.
3) கசிவை காட்டுவதற்கான பரிசோதனை அமைப்பாவதுடன் உறையில் கனியுப்புக்கள் கலந்து நீர் காணப்படுகிறது.
4) கசிவைக் காட்டுவதற்கான பரிசோதனை அமைப்பாவதுடன் உறையில் கனியுப்புக்கள் அற்ற நீர் காணப்படுகிறது.

10) உயிர்க்கலத்தில் நடைபெறும் பிரிகை ஒன்றைக் கீழே காணலாம். இம்முறையில் பிரிகையடையாத கலம் பின்வருவனவற்றுள் எது?




1) புணரிக்கலங்கள் பெருக்கமடையும் போது நடைபெறுகின்றது.
2) புணரிகள் ஆக்கத்தின் போது
3) உடல்புண்கள் குணமடையும் போது நடைபெறும்
4) இறந்த உடல்கலங்கள் இடமாற்றம் செய்யும் போது நடைபெறும்

11) அங்கிகளை உள்நிலைக்காப்பு மேற்கொள்ளப்படும் இடம்
1) விலங்கியல் பூங்கா 2) தாவரவியல் பூங்கா
3) பாதுகாப்புவனம் 4) விலங்கு காப்பகம்

12) ஊசிக்கு நூல் கோக்கும் போது உதவும் நரம்புத் தொகுதியுடன் தொடர்பான உறுப்புகள்
1) மூளையம் 2) முண்ணாண்
3) நீள்வளைய மையவிழையம் 4) மூளி

13) ஒரு மூலகம் 3 சக்தி மட்டங்களைக் கொண்டது. இறுதிச் சக்தி மட்டம் ஒரு இலத்திரனைக் கொண்டது. கருவில் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 12 ஆகும். இதன் திணிவு எண்
1) 12 2) 23 3) 11 4) 1


14)

| கரைசல் | $P^H$ பெறுமானம் |
|---|---|
| P | 2 |
| Q | 3 |
| R | 9 |
| S | 11 |

பல கரைசல்களின் $P^H$ பெறுமானம் கீழே தரப்பட்டுள்ளது. அதிகளவு அமிலத்தன்மை கொண்ட கரைசல்
1) P 2) Q
3) R 4) S

15) X, Y உலோகங்கள் மூன்றின் பிரித்தெடுப்பு முறை கீழே தரப்பட்டுள்ளது.
X - உலோகத் தாதை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றி பெறப்படும்
Y - உருகிய குளோரைட்டு மின்பகுத்து பெறப்படும்.
Z - உலோகத்தை மாசுக்களை அகற்றிப் பெறுதல்.
தாக்குத்திறன் அடிப்படையில் இவ்வுலோகங்களை படிமுறைப்படுத்தும் போது பெறப்படும் ஒழுங்கு
1) Z,X,Y 2) Y,X, Z
3) X,Y,z 4) Z, Y, X


16) இயற்கை இறப்பரில் ஐசோப்பியன் என்னும் சேதனச் சேர்வை காணப்படுகிறது. அதன் சூத்திரத்தை இவ்வாறு காட்டலாம். வல்கனைஸ் படுத்தப்பட்ட இறப்பரை தகனமடையச் செய்தால் வெளியேறும் வாயு




1) காபனீரொட்சைட்டு மாத்திரம் 2) காபனீரொட்சைட்டு, நீர்
3) நீர் மாத்திரம் 4) காபனீரொட்சைட்டு, நீர், கந்தவீரொட்சைட்டு

17) பின்வரும் எந்த ஒட்சைட்டு சேர்வைக்கு பினோப்தலின் சேர்த்தபோது இளம் சிவப்பு நிறம் தோன்றும்.
1) $Na_2O$ 2) $CO_2$ 3) $SO_2$ 4) $NO_2$

18) மெழுகு தகனமடையும் போது தோன்றும் விளைபொருள் சுண்ணாம்பு திரவத்தினூடாகச் செலுத்தி வெளியகற்றுவதற்குப் பொருத்தமான அமைப்பு





19) மக்னீசியம் ஐதான ஐதரோக்குளோரிக்கமிலத்துடன் நடைபெறும் தாக்கத்தின்போது வெளியேறும் வாயுவின் கனவளவு அதற்கு எடுத்த நேரத்தின் எதிராக வரையப்பட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




1) 40 செக்கனின் பின்னர் சீராக வாயுக்குமிழிகள் வெளியேறியுள்ளன.
2) 40 செக்கனில் தாக்கம் நிறைவுபெற்றுள்ளது.
3) தாக்கவீதம் எப்பொழுதும் மாறிலியாகும்.
4) 40 செக்கனின் இறுதியில் ஐதரோகுளோரிக்கமிலம் முடிவடைந்துள்ளது.

20) பல்லினக் கலவையாக அமைவது
1) அடைக்கப்பட்ட போத்தலிலுள்ள சோடாப்பானம்
2) இயற்கையாக உள்ள நீர்
3) கருங்கல் துண்டு
4) பொற்றாசிய பரமங்கனைற்றுக் கரைசல்.

21)





இரச நிரலினால் கண்ணாடிக்குழாயில் வளிநிரல் ஒன்றுசிறைப்படுத்தப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. குழாய் நிலைக்குத்தாக வைக்கப்பட்டுள்ளபோது வளி நிரலின் மீது தொழிற்படும் அமுக்கம்.

1) இரசநிரலினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.
2) இரசநிரலினால், வணிமண்டல அமுக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும்.
3) வணிமண்டல அமுக்கத்தினால் மட்டும் ஏற்படுத்தப்பட்டதாகும்.
4) வணிமண்ட அமுக்கத்தை இரச நிரலினால் ஏற்படுத்தப்படும் அமுக்கத்திலிருந்து குறைப்பதனால் பெறப்பட்ட அமுக்கத்திற்குச் சமனாகும்.

22) 1 mol $dm^{-3}$ செறிவு கொண்ட குளுக்கோசு ($C^6H^{12}O^6$) கரைசலை $500cm^3$ தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான குளுக்கோசு திணிவு கிராமில் (C =12, H =1, O =16)


1) 500 2) 90 3) 180, 4) 60

23) இளநீரிலிருந்து வினாகிரி தயாரிக்கும் முறையை பாய்ச்சல் கோட்டுப்படம் மூலம் காட்டப்பட்டுள்ளது.




a,b வெற்றிடங்களுக்குப் பொருத்தமானது முறையே
1) இன்வடேசு, எதைல் அல்கோல்
2) எதைல அல்ககோல், அசற்றோபக்டர்
3) மெதைல் அல்ககோல், சைமேசு
4) அசற்றோபக்டர்

24)




தூய ஆணியினைச் சுற்றி உலோகங்கள் சுற்றப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. இவற்றுள் இரும்பு ஆணிக்கு கதோட்டும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

1) A 2) B 3) C 4) D

25) அலுமினிய உலோகப் பாத்திரங்களில் உலோக அரிப்பைத் தடுப்பதற்கு அவற்றின் மீது ஒட்சைட்டு படலம் ஒன்று தோற்றுவிக்கப்படும். இதன்போது
1) மின்பகுபொருளாக அமிலம் சேர்க்கப்பட்ட நீரும் அனோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
2) மின்பகுபொருளாக அமிலம் சேர்க்கப்பட்ட நீரும் கதோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
3) மின்பகுபொருளாக செப்புசல்பேற்றுக் கரைசலும் கதோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.
4) மின்பகுபொருளாக சோடியம் குளோரைட்டு கரைசலும் அனோட்டாக அலுமினிய பாத்திரமும் வைக்கப்படும்.

26) பின்வரும் இலத்திரனியல் துணைப்பாகங்களில் விரியலாக்கியாக தொழிற்படுவது





27) 750 w வலுவைக் கொண்ட மின் அழுத்தி 3 நிமிடநேரம் சட்டை அழுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டதாயின் அது வெளியிட்ட சக்தி


1) 750 x 3 x 60J 2) 750 x 3J 3) $\frac{750 \times 60J}{3}$ 4) $\frac{750 \times 3J}{60}$

28) O என்னும் ஒளி முதலிடத்திலிருந்து வெளியேறிய ஒளிக்கதிர்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தெளிப்படைந்ததாயின், A, B இல் காணப்படுவது.

1) குழிவு வில்லை, குவிவுவில்லை
2) குவிவாடி, குழிவுவில்லை
3) குவிவுவில்லை, குழிவுவில்லை
4) குழிவாடி, குவிவுவில்லை





29) மையப்பூச்சிய கல்வனோமானியுடன் தொடர்புபடுத்தப்பட்ட கம்பிச் சுருளொன்றை படம் காட்டுகின்றது. கல்வனோமானி தூண்டப்படுவது பற்றிய பிழையான கூற்று.





1) காந்தத்தின் வடமுனைவு சுருளை நோக்கி அசைக்கும்போது தாண்டல் மின்னோட்டம் உருவாகும்.
2) காந்தத்தின் தென்முனைவு சுருளை நோக்கி அசைக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகும்.
3) சுருளினுள் காந்தத்தை நிலையாக வைத்திருக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகாது.
4) காந்தத்தை சுருளினுள் அசையாது வைத்து சுருளை அசைக்கும்போது தூண்டல் மின்னோட்டம் உருவாகாது.

30) குழாயினுள் இரசத்துடன் இடப்பட்ட நீர், மண்ணெண்ணெய் என்பவற்றில் அமைவை சரியாகக் காட்டும் உரு





31)




நான்கு பரிசோதனைக் குழாய்களுக்கு நீர் இடப்பட்டுள்ள முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது. குழாயின் மேல் முனையில் வாயை வைத்து ஊதும் போது கூடிய சுருதியுடன் ஒலி எந்தக் குழாயில் உருவாகும்.

1) A 2) B 3) C 4) D


32) NOT தருக்கப்படலையின் தொழிற்பாட்டை சரியாகக் காட்டும் சுற்று





33) இரண்டு விசைகள் சமநிலையில் காணப்படும் சந்தர்ப்பமாக அமைவது
1) இரண்டு கால்கொண்ட வாங்கு நிலத்தில் ஓய்வாகக் காணப்படுதல்
2) இரண்டு மனிதர்கள் மரக்குற்றியை தோள்பட்டையில் வைத்து சுமந்து செல்லுதல்
3) பழம் ஒன்று மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தல்
4) கயிறு இழுத்தல் போட்டியில் ஒரு பக்கத்தை நோக்கி கயிறு அசைதல்.

34) சுனாமி தோன்றும் போது ஏற்படும் நீரலையின் வேகம் ஆழ்கடலில்
1) குறைவடைவதுடன் அலைநீளமும் கூடுகின்றது.
2) அதிகரிப்பதுடன் அலைநீளமும் கூடுகின்றது.
3) குறைவடைவதுடன் வீச்சம் பெரிய பெறுமானத்தைப் பெறும்
4) அதிகரிப்பதுடன் வீச்சம் பெரிய பெறுமானத்தை பெறும்.

35) ஆர்முடுகலுடன் பயணிக்கும் பொருளொன்றின் அசைவைக் காட்டும் வரைபு




36) இரண்டு பற்சில்லுகள் பொருத்தப்பட்டிருக்கும் முறையைப் படம் காட்டுகின்றது. A சில்லில் 60 பற்களும் B சில்லில் 15 பற்சில்களும் உண்டு.
A பற்சில்லு ஒருமுறை வலம் சுழியாக சுழலும் போது சில்லு B ஆனது
1) வலஞ்சுழியாக நான்குமுறை சுழலும்
2) வலஞ்சுழியாக இரண்டு முறை சுழலும்
3) இடஞ்சுழியாக நான்கு முறை சுழலும்
4) இடஞ்சுழியாக இரண்டு முறை சுழலும்




37) உராய்வு விசை தொழிற்படாத சந்தர்ப்பமாக அமைவது
1) இயங்கும் மோட்டார் வண்டியை நிறுத்த சாரதி தடுப்பை பிரயோகித்தல்
2) பனிப்பாறையில் சறுக்கும் ஒருவர் பாய்வதற்கு
3) மோட்டார் வண்டி பயணிக்கும் போது
4) நாம் நடக்கும்போது

38) முன்னேற்றம் அடைந்த நாடுகளில் மின்னை உற்பத்தி செய்ய கருச்சக்தி பயன்படுத்தப்படுகின்றது. இதிலுள்ள பிரதிகூலம்
1) இது எப்பொழுதும் விலைகூடிய முறையாகும்
2) கதிரியக்க கழிவுகளை அகற்ற முடியாமல் இருத்தல்
3) உருவாக்கப்படும் மின்சக்தியை தூர இடங்களுக்குக்கொண்டு செல்ல முடியாமை
4) மூலவளம் காணப்படும் நாடுகளில் மாத்திரம் பயன்படுத்தப்படுதல்

39) விலங்குகளுக்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த ஓசோன். சிறந்த ஒட்சியேற்றியாகும். ஓசோன் அழிவை ஏற்படுத்தினாலும் ஓசோன் படையில் துளையேற்படுவதைப் பற்றி நாம் கவனத்திற் கொள்வதற்கான காரணம்
1) ஓசோன் துளையினூடாக வளியில் காணப்படும் வாயுக்கள் வெறியேறும்
2) ஓசோன் துளையினூடாக புவியில் உள்ள வெப்பசக்தி வெளியேறும்
3) ஓசோன் துளையினூடாக கழியூதக்கதிர்கள் புவிமேற்பரப்பை வந்தடையும்
4) ஓசோன் படையில்லாவிட்டால் நீர்வட்டம் ஒழுங்காகச் செயற்படாது

40) சூழல்பற்றிய மக்களிடம் காணப்படவேண்டிய சரியான மனப்பாங்கு
1) சூழல் எமக்குரியது
2) நாங்கள் சூழலுக்குரியவர்கள்
3) சூழலை எமக்கேற்ப மாற்றிக்கொள்ள முடியும்
4) சூழலிலிருந்து உயர் பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

## 04.02.2014 செவ்வாய்க்கிழமை வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | 1 | 12) | 1 |
| 2) | 1 | 13) | 2 |
| 3) | 4 | 14) | 220/= |
| 4) | 1 | 15) | 330/= |
| 5) | 1 | 16) | 3 |
| 6) | 2 | 17) | 4 |
| 7) | □ | 18) | 6 |
| 8) | = | 19) | 2 |
| 9) | 10/12/13/11/17 | 20) | 3 |
| 10) | 10/8/7/9/3 | 21) | 6 |
| 11) | 1 | 22) | 3 |

# எதிர்காலம் குறித்த இலட்சியம் இளைஞர்களிடம் இருக்க வேண்டும்

## வவுனியா வடக்கு பிரதேச செயலர் அறிவுரை



இளைஞர்கள் எதிர்காலத்தை எவ்வாறு கையில் எடுப்பது என்ற இலட்சிய நோக்கு இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்திலேயே இளைஞர்கள் மேன்மையடைய வாய்ப்புகள் ஏற்படும்.

வலிமை மிக்க இளைஞர்களின் கைகளில் வாள்கள் இருப்பது துர்ப்பாக்கியமென வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் கவலை தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்றுமுன்தினம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தனது கவலையை வெளிப்படுத்தினார்.

அவர் தனதுரையில்,

"இளைஞர்கள் வருங்காலத்தின் சிற்பிகள். இவர்களில் ஏராளமான நல்ல இளைஞர்கள் இருக்கின்றனர். எனினும், ஒரு சில தீய சிந்தனையுள்ள இளைஞர்களால் இளைஞர்கள் சகலருக்கும் நற்பெயர் ஏற்படுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆவா குழு உட்பட வேறு குழுவொன்றும் இயங்கிய நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இளம்வயதினர். ஆவா குழுவின் தலைவர் 21 வயதுடையவராக இருந்துள்ளார். இது இளைஞர் சமூகம் தவறாகச் செல்வதை எடுத்துக்காடடியுள்ளது. இக்குழுவினர் யாழ். மக்களை நித்திரையின்றிச் செய்துள்ளனர்.

இளைஞர்கள் பெரியவர்களுக்கு மதிப்பளித்து வணங்க வேண்டியவர்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் இருந்து சில தீய குழுக்கள் பெரியவர்கள் தம்மை வணங்க வேண்டும் என கட்டளையிட்டுள்ளனர். இது வெட்கப்படவேண்டிய விடயம்.

இளைஞர்களாகிய நீங்கள் சவால்களை கையில் எடுக்க வேண்டும். இளைஞர் கழகத்தில நான் இருந்தமையினாலேயே இன்று பிரதேச செயலாளராக இருக்கின்றேன். அதன்மூலம் பெறப்பட்ட தலைமைத்துவம் எனக்கு மிகவும் பயனாகவுள்ளது. எனவே இளைஞர்கள் இளைஞர் கழகங்களை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இளைஞர்கள் திட்டமிடலுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதுடன் இலட்சிய நோக்கோடு செயற்படவும் வேண்டும். ஆனால், இன்று வீதிகளில் செல்லும் பல இளைஞர்கள் எதுவித சிந்தனையும் இன்றி திரிகின்றனர். இவர்கள் நாட்டிற்கு சுமையாகவே இருப்பர்.

இளைஞர்களாகிய நீங்கள் சமூகத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அளவிற்குத் சவால்களை எதிர்கொள்பவர்களாகத் வளரவேண்டும். முழுமையாக சமூக பிரச்சினைகளை நீங்கள் தீர்த்து விட முடியாது. எனினும் சில பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனை சீர்செய்ய முடியும். குறிப்பாக நீங்கள் வாழும் பிரதேசத்தை மது அற்ற பிரதேசமாக மாற்றுவதாக சத்தியம் செய்துகொள்ளுங்கள். அது பயனுள்ளதாக இருக்கும்.

இதன்மூலம் பிழையாகச் செல்லும் இளைஞர் சமூகத்திற்கு நீங்கள் முன்னுதாரணமாக வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றார்.

இதன்போது வவுனியா வடக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள 20 இளைஞர் கழகங்களுக்கிடையிலான நிர்வாகத் தெரி வின்போது தலைவராக ம.உதயகுமாரும் செயலாளராக சி.சதீஸ்குமாரும் பொருளாளராக ஆர்.ரதனும் உபதலைவராக ஆர்.அகல்யாவும் உபசெயலாளராக பி.தர்சிகாவும் அமைப்பாளராக எஸ்.சஞ்சனும் தெரிவுசெய்யப்பட்டனர். (40)

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் போதனாசிரியர்களுக்கு பயிற்சி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கிராம உத்தியோகத்தர் பணிமனையில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் போதனாசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது.

குறித்த மகளிர் அபிவிருத்தி நிலையத்தினூடாக நடத்தப்படும் இப்பயிற்சியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று ,ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் கிளிநொச்சி, மன்னார் போதனாசிரியைகளும் பிரதேசங்களில் பயிற்சி பெறும் பயன்ளிகளும் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிகள் பிரதேச மட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் தையல் பயிற்சி ஆறு மாத காலமும் , மனையியல், அழகுக்கலை மூன்று மாதமும் நடைபெறுகின்றன.

போர்க்காலச் சூழலில் அகப்பட்டு நொந்து போயுள்ள இப்பயிற்சியாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டிய நிலை அங்கு வலியுறுத்தப்பட்டது.

இது தவிர மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் அபிவிருத்தி உத்தியோகத் தர்களின் பற்றாக்குறையால் ஏற்படும் நிலைமைகளை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எடுத்துக்கூறினார்.

# பிள்ளையை ஏற்றிவரச் சென்ற பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியினைச் சேர்ந்த பெண்ணொருவரின் மூன்றரைப் பவுண் தாலிக்கொடியினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் பனிப்புலம் அம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் தனது பிள்ளையினை முன்பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்காக துவிச்சகர வண்டியில் சென்றவேளை, பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணின் தாலிக்கொடியினை அறுத்துச் சென்றதாக குறித்த பெண் தனது முறைப்பாட்டில் தெரிவிததுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவித்தனர்.

# விதிமுறையை மீறியதால் செலுத்தினார் தண்டம்



கிளிநொச்சி கனகபுரம் புகையிரதக் கடவையில் புகையிரதம் வருவதற்காக கடவை மூடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை கடவையினூடாகச் செலுத்திச் சென்ற நபருக்கு 1500 ரூபா தண்டப் பணம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிவான எம்.ஐ.வாகாப்தீன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸாரினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்ட கனகபுரம் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

# வண்ணார் பண்ணையில் வீடொன்றில் திருட்டு

யாழ். வண்ணார்பண்ணை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 62,000 ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் நேற்றுமுன்தினம் மாலை முறைப்பாடு செய்ததாக யாழ் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ.எ.எல்.விக்கிரமராட்சி தெரிவித்தார்.

குறித்த வீட்டிலுள்ளவர்கள் நண்பகல் உறவினர வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பியபோது, வீட்டின் முன்கதவை உடைத்து உபகரணங்களை திருடியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (25)

# மன்னார் சர்வமத பேரவையின் இரண்டாவது ஒன்று கூடல்



இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் வழிநடாத்தப்படும் மன்னார் சர்வமதப் பேரவையின் இரண்டாவது ஒன்று கூடல் எதிர்வரும் 22 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு மன்னார் சமாதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வளங்கள் ( ஆர்.பி.ஆர்) அமைப்பின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளதாக மன்னார் ஆர்.பி. ஆர் . அமைப்பின் திட்ட முகாமையாளர் செல்வாநந்த ராகவன் தெரிவித்துள்ளார்.

யு எஸ் எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இடம்பெறவுள்ள இவ் ஒன்று கூடலில் சர்வமதத்தலைவர்கள் , சிவில் சமூகத்தவர்கள், ஊடகவியலாளர்கள்,கல்விமான்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வருடாந்தப் பொதுக்கூட்டம்

(வேலணை)

நயினாதீவு நாகபூஷனி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி மு.ப 10.30 மணியளவில் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் பரிபாலன சபையின் தலைவர் ப.ப பரமலிங்கம் தலைமையி இடம்பெறவுள்ளது. (05)



பாகிஸ்தான் அரசின் உதவியுடன் மேல் மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலை பயிற்சி நெறித் திட்டத்தில் பணியாற்றவுள்ள பெண்ணொருவருக்கு அமைச்சர் பசில் ராஷபக்ஷ நியமனக் கடிதத்தை வழங்குவதனைக் காணலாம்.

# சிரிய பிரச்சினையின் தீர்விற்கு தடையாக உள்ளது ரஷ்யா

## ஒபாமா குற்றச்சாட்டு



சிரியப் பிரச்சனையின் தீர்வை நோக்கிய பயணத்திற்கு, ரஷ்யா சகல வழிகளிலும் தடையாக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மிகவும் தெளிவான வார்த்தைகளில் குற்றம் சாட்டியுள்ளார்.

சிரியாவிலுள்ள சர்வ சாதாரண பிரஜைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முயலும் சகல முயற்சிக்கும் மொஸ்கோ காரணமின்றி இடையூறு விளைவிக்கிறதெனவும் அங்குள்ள மக்களின் பட்டினிச்சாவிற்கு சகல வழிகளிலும் ரஷ்யா பொறுப்பாக வேண்டுமெனவும் பிரான்ஸ் ஜனாதிபதியுடன் இணைந்து பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் ஒபாமா குறிப்பிட்டார்.

15 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தீர்வு காண முயன்ற சிரியாவின் மனிதாபிமான நடவடிக்கைகள், ரஷ்யாவின் திடமான எதிரிடையான நோக்கத்தால் முறியடிக்கப்பட்டது. மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான பேச்சு ஐ.நா. பாதுகாப்புச் சபையால் ஆரம்பிக்கப்பட்ட மாத்திரத்தே ரஷ்ய வெளிவிவகாரச் செயலர் செர்ஜேவ் லொரொ, அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். ரஷ்யாவின் வீட்டோ அதிகாரம் சிரிய மக்களைப் போரிலும் பட்டினிச் சாவிலும் இரக்கமற்றுத் தள்ளுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# இயக்குநர் பாலுமகேந்திரா உடல் நலக்குறைவால் மரணம்



இயக்குநர் பாலுமகேந்திரா (வயது - 74) உடல்நலக் குறைவால் நேற்றுக் காலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் மரணமடைந்தார்.

நேற்றுக் காலை பாலு மகேந்திராவிற்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனால் சென்னை விஜயா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரிவித்தனர். தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் காலமானார்.

சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த படம் என ஐந்து முறை தேசிய விருது வென்றவர் பாலு மகேந்திரா. தேசிய விருது மட்டுமன்றி கேரளா மற்றும் கர்நாடக மாநில அரசுகளின் விருதுகளையும் வென்றிருக்கிறார். இயக்குநர் பாலா, ராம், வெற்றிமாறன் உள்ளிட்ட பல முன்னணி இயக்குநர்கள் இவரிடம் உதவி இயக்குநர்களாக பணியாற்றிவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலு மகேந்திரா மறைவிற்கு தமிழ்த்திரையுலகினர் பலரும் தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து வருகிறார்கள்.

# ஸ்பெயினில் கருக்கலைப்பு சட்ட மூலம் தோற்கடிப்பு





ஸ்பெயினில் பெண்கள் கருக்கலைப்புச் செய்வதற்கான உரிமையை முடிவுக்கு கொண்டுவரும் சட்டமூலம் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக 183 வாக்குகளும், ஆதரவாக 151 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த சட்டமூலம் தொடர்பான இரகசிய வாக்கெடுப்புக்கு ஆளும் கட்சி அனுமதி வழங்கியுள்ளதுடன் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை..

இந்த சட்டமூலத்திற்கு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பு வெளியிட்டதுடன், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படின் கருக்கலைப்புச் செய்வதற்காக பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வார்கள் என எதிர்க்கட்சிகள் வாதிட்டுள்ளன.

# மோடியுடன் இறுக்கமான நிலை கைவிட்டது அமெரிக்க அரசு



குஜராத் முதல்வரும் பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடியை இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் நான்சி பாவெல் நேற்று சந்தித்து பேசினார்

2002இல் குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தைத் தொடர்ந்து நரேந்திர மோடிக்கு அமெரிக்கா செல்ல விசா மறுக்கப்பட்டது 2005ஆம் ஆண்டு அமெரிக்கா செல்வதற்காக மோடி விசாவிற்கு விண்ணப்பித்தார். ஆனால் குஜராத் கலவரத்தை காரணம் காட்டி விசா மறுக்கப்பட்டது. தற்போது லோக்சபா தேர்தலுக்கான பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக மோடி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் மீதான நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது அமெரிக்கா.

இதைத் தொடர்ந்து மோடியை சந்திக்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்தது. இது தொடர்பாக மோடியும் சில நிபந்தனைகளை விதித்திருந்தார். மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும், 2002 சம்பவங்கள் பற்றி விவாதிக்கக் கூடாது, காந்திநகரில் தான் சந்திப்பு நடைபெற வேண்டும் என்றும் மோடி தரப்பில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனை ஏற்று நேற்று குஜராத்தின் காந்திநகரில் நரேந்திர மோடியை நான்சி பாவெல் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் மூலமாக அமெரிக்கா கடைப்பிடித்து வந்த மோடி புறக கணிப்பு முடிவுக்கு வந்தது.

# இலங்கை தம்பதிகள் கடத்தல் ஸ்கொட்லன்ட்யார்ட் விசாரணை

பிரித்தானிய பிரஜைகளான இலங்கை தமிழ்த் தம்பதிகள், சென்னையில் கடத்தப்பட்டது தொடர்பாக, ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் சென்னையில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் தவராஜ் (வயது-59), சலஜா(வயது- 55) ஆகிய பிரித்தானிய குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழ்த் தம்பதியர் மர்ம நபர்களால் கடத்தப்பட்டனர். இவர்களை விடுவிப்பதற்கு 2.5 கோடி ரூபாய் பணயத் தொகை கேட்கப்பட்டது. இந்தக் கடத்தல் தொடர்பாக தமிழக பொலிஸார் 13 பேரைக் கைது செய்துள்ளனர். அதேவேளை, இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய அஜந்தன் மற்றும் ரமேஷ் ஆகிய இலங்கைத் தமிழர்களைஇங்கில்ாந்தின் ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# இஸ்ரேலிலுள்ள கன்னிமேரி வடிக்கின்றாள் கண்ணீர்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் நாட்டிலுள்ள கன்னி மேரி சிலையொன்று கண்ணீர் வடிப்பதனை பெருமளவானோர் பார்த்து வருகின்றனர்.

இஸ்ரேல் நாட்டின் வடக்குப் பகுதியில் லெபனான் எல்லையை ஒட்டியுள்ள டர்ஷிஹா என்ற சிறிய நகரத்தில் ஒசாமா கௌரி குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அவரது மனைவி அமிரா தங்கள் வீட்டு வரவேற்பறையில் இருக்கும் கன்னி மேரி சிலை சமீப காலங்களில் பளபளப்புடன் இருப்பதைக் கவனித்துள்ளார்.

சுத்தம் செய்த சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் அந்த சிலையில் எண்ணெய்த்தன்மை தென்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி அந்த சிலை தன்னிடம் பேசியதாகவும், தன்னை பயப்பட வேண்டாமென்று கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கும் ஒருவரும் இந்த சிலையின் மேல் எண்ணெய் வடி



வதைக் கண்டதாகக் கூறவே, இந்தச் செய்தி எங்கும் பரவ ஆரம்பித்தது. நூற்றுக்கணக்கான மக்கள் இந்தச் சிலை அழும்போது எண்ணெய் வடிகின்றது என்று கூறி அதனைப் பார்ப்பதற்காக இங்கு திரளுகின்றனர்.

இதுமட்டுமின்றி இந்த சிலையின் கன்னத்தில் ஒரு கண்ணீர்த்துளி திரண்டு வெளிப்பட்டதாக இந்தக் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் மட்டும் 2,000இற்கும் மேற்பட்டோர் வந்து இந்த சிலையை பார்த்து சென்றுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்

## தூங்கும்....


அதேபோல, புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்த நிலைத் தலைவர்களில் ஒருவரான ராகவன் இயக்கத்திலிருந்து இரகசியமாக வெளியேறி உறங்குவதற்கு நேராகச் சென்ற இடம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சூளைமேடு அலுவலகம்.

இதுவரை தமிழ் சினிமா கண்டிராத இரு பொருட்கள் இந்தப் படத்தில் பேசப்படுவதைக் குறித்துக்கொள்வோம். ஒருபாலுறவாளர்களான இரு தமிழ் இளைஞர்களின் காதல், வெளி அழுத்தங்களால் கலைக்கப்படுவதையும் அதன் துயரையும் படம் அழுத்தமாகப் பதிவாக்கியிருக்கிறது. ஆறு கதைகளில் இது ஒரு கதை என்றபோதிலும் படம் முழுவதும் அந்தத் துயரை இயக்குனர் அணையாமல் வைத்திருக்கிறார்.

ஓர் ஆபிரிக்க அகதிக்கும் ஈழத் தமிழச்சிக்குமான காதலை மிகச் சில காட்சிகளிற்குள்ளேயே உணர்வுபூர்வமாகவும் காதலின் பரிசுத்தத்தோடும் படம் சித்திரிக்கிறது. படம் அவர்கள் இருவரது இணைவுடனேயே முடிகிறது. ஆபிரிக்கர்களுக்கு தமிழ்ப் பெண்களைச் சேர்த்துவைத்து லெனின் எம்.சிவம் தமிழ் கலாசாரத்தை அழிப்பதாக திரையிடலுக் குப் பின்னான கலந்துரையாடலில் காரசார மான வாதம் வைக்கப்பட்டதையெல்லாம் என்ன சொல்வது! இன்றைய தேதிக்கு இந்த உலகத்திலேயே அதிகளவு ஆட்களைக் கொண்ட சாதி அகதிச் சாதிதான், நாம் அதன் மக்கள் என்கிறதுபடம்.

நூறாண்டுகளை நெருங்கும் தமிழ்ச் சினிமாவின் முதன்மையான பத்துத் திரைப்படங்களைப் பட்டியலிட்டால் அந்தப் பட்டியலில் 'ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்' திரைச்சித்திரத்திற்கு இடமுண்டு. காலம் அந்த மரியாதையை இத்திரைப்படத்திற்குக் கண்டிப்பாக வழங்கும்.

வணிக நோக்குக் கருதியோ அல்லது அரசியல் நிர்ப்பந்தங்களாலோ லெனின் எம். சிவம் தனது கலை வெளிப்பாட்டில் சமரசம் செய்துகொண்டால் அவரின் கால்களிற்குக் கீழே புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளின் செங்கம்பளம் நிரந்தரமாக விரிக்கப்பட்டிருக்கும். அந்தச் சமரசத்திற்கு அவர் தயாராக இல்லாவிட்டால் கல்லிலும் முள்ளிலும்தான் கால்பதித்து அவர் நடக்க வேண்டியிருக்கும். ஆனால் அந்தக் கடுமையான பாதையின் முடிவில் சர்வதேசச் சினிமாவின் கதவுகள் அவருக்காக அகலத் திறந்து கிடக்கின்றன.



# வடக்கில் விடுதலைப் புலிகள் மனித உரிமைகளை மதிக்கவில்லை

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

(புதுடில்லி)

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகள் மனித உரிமைகளை மதிக்கவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களை கொலை செய்து குப்பைத் தொட்டியில் போட்டனர். இச்சம்பவங்களை நான் நேரடியாக அவதானித்தேன் என்று முன்னாள் இந்திய அமைதிப்படையின் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கேணல் ஹரிகரன் தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நேர்காணல் கேள்வி பதில் வடிவில் தொடர்கிறது.

கேள்வி: இந்திய அமைதி காக்கும் படை ஆரம்பத்தில் புலிகள் அமைப்பால் வரவேற்கப்பட்டார்கள் என நான் அறிகிறேன். ஆனால் இந்த நிலை பின்னர் தலைகீழாக மாறியது. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இந்திய அமைதி காக்கும் படையினர் பல்வேறு மீறல்களை மேற்கொண்டதால் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் போர் மூண்டது. இது தொடர்பில் நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? அதாவது இந்தியப் படைகள் தமிழர்களுக்கு எதிராக ஏதாவது மீறல்களைப் புரிந்தன? பொதுவாக இது தொடர்பான தங்களது கருத்து என்ன?

பதில்: ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் இந்திய அமைதி காக்கும் படையுடன் நடுநிலையான தொடர்பைப் பேணினர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இந்தியப் படைகளால் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறையிடப்பட்டன. பிரபாகரன் தனக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட வேண்டும் எனவும் இடைக்கால நிர்வாகத்தில் பகுதியளவான அதிகாரம் வழங்கப்படுவதை பிரபாகரன் விரும்பவில்லை.

தமிழர்கள் இலங்கையில் இரண்டாந்தரக் குடிமக்களாக நடாத்தப்படுவது தொடர்பில் இந்தியப் படைகள் அனுதாபம் காட்டிய போதிலும், பிரபாகரன் ஒரு சுதந்திரப் போராளி என நாங்கள் ஒருபோதும் கருதவில்லை. ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் தன்னுடன் ஒத்துவராத தமிழ் அரசியற் தலைவர்கள் எனப் பலரை பிரபாகரன் இரக்கமற்ற வகையில் படுகொலை செய்தார்.

சிங்கள இராணுவ முகாமில் முறைப்பாடுகள் செய்தவர்கள், பத்து கிராம் போதைப் பொருட்களை வைத்திருந்தவர்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கியோர் என 102 பொதுமக்களை புலிகள் அமைப்பினர், நாசி ஜேர்மனியரின் பாணியில் படுகொலை செய்து குப்பைக் கிடங்குகளில் போட்டனர். இதனை என்னால் நினைவுபடுத்த முடிகிறது.

இந்தியப் படைகளுடனான முதல் நாள் யுத்தத்தின் போது ரூபவாஹினி தொலைக்காட்சி சேவைப் பணியாளர்கள் சிலர் புலிகள் அமைப்பால் உயிருடன் பிடிக்கப்பட்டு மின்விளக்கு கம்பத்துடன் ரயர்களால் கட்டப்பட்டு தீ மூட்டப்பட்டனர்.

நாங்கள் அவர்களது பாதி எரிந்த உடலங்களைப் பார்த்தோம். நான் இவற்றைப் பார்த்த போது பிரபாகரனின் தலைமைத்துவம் மற்றும் இவரது ஈழம் தொடர்பான கருத்தியல் மீது நான் கொண்டிருந்த மிகக் குறைந்த ஆர்வத்தையும் இழந்தேன். ஆயுதங்களின் பலத்தை மட்டும் பிரயோகித்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற பிரபாகரனின் கொள்கைப் பிடிவாதமே 2009 இல் புலிகள் அமைப்பு யுத்தத்தில் தோல்வியுற்றமைக்கான பிரதான காரணமாகும்.

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது இந்தப் படைகளால் இழைக்கப்பட்ட சில மீறல்களை ஆராய்ந்து கொள்ளலாம். இந்தியப் படைகளின் கூட்டு நடவடிக்கையின் போது பல அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்த நோயாளிகள் மற்றும் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிக மோசமான மீறலாகும்.

இதேபோன்று வல்வெட்டித் துறையில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலின்போது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை பிறிதொரு முக்கிய மீறல் சம்பவமாகும். இந்த மீறல்கள் தொடர்பில் உண்மையான விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதில் இராணுவத் தலைமையும் அரசாங்கமும் தவறிழைத்து விட்டது என நான் கருதுகிறேன்.

கேள்வி: 2009 இல் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோருவது நியாயமானது என நீங்கள் கருதுகிறீர்களா? இவ்வாறான ஒரு விசாரணை மேற்கொள்ளப்பட்டால் இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையால் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பாகவும் விசாரிக்கப்பட வேண்டும் என அண்மையில் இலங்கை அதிபரின் செயலர் லலித் வீரதுங்க சுட்டிக்காட்டியிருந்தமை தொடர்பில் உங்களது கருத்து என்ன?

பதில்: இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்களை உறுதிப்படுத்துகின்ற சாட்சியங்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு தவறிழைத்தவர்களை இனங்கண்டு தண்டனை வழங்க வேண்டும். போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை பாரபட்சமான விசாரணைகளை மேற்கொள்கிறது.

கேள்வி: விடுதலைப் புலிகள் அல்லது வேறு ஆயுதக் குழுக்கள் இலங்கையில் மீண்டும் உருவாகும் என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: இல்லை. விடுதலைப் புலிகள் போன்ற ஒரு பலமான தீவிரவாத அமைப்பு உருவாவதற்கு ஐந்து, பத்தாண்டுகள் தேவைப்பட்டது. இதற்கு உள்நாட்டு மற்றும் பூகோள சூழல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது பிரபாகரன், பத்மநாபா, சிறிசபாரட்னம் போன்ற ஆயுதக் குழுத் தலைவர்களை உருவாக்கியது. ஆனால் தற்போது சூழல் மாறிவிட்டது. அரசியலில் இக் கருத்தியல் அழிக்கப்பட்டுவிட்டது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. அல்குவைதா தவிர ஏனைய தீவிரவாதக் குழுக்கள் அழிக்கப்பட்டு விட்டன.

தமிழ் மக்கள் போரின் விளைவால் இரண்டு தலைமுறைகளை இழந்து வேதனையில் வாழ்கின்றனர். இவர்கள் இந்த யுத்தத்தால் களைப்படைந்து விட்டனர். தமிழ் மக்கள் தமது அடையாளம் தவிர வேறெதனையும் கொண்டிருக்கவில்லை. உயிர்வாழ்வது மற்றும் வாழ்வாதாரம் போன்றன தமிழ் மக்களின் முன்னுரிமைகளாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

### 13 ஐ தாண்டிய...

உள்ள இந்திய வெளிவிவகார அமைச்சில் சந்தித்த இலங்கையின் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சம்பந்தமாக கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தொடர்பில் எதனையும் இப்போது அனுமானித்து கூற முடியாது. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கு முக்கியமானது. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று எந்த யோசனைகளையும் இந்தியா முன்வைக்கவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகார பரவலாக்கம் என்பது இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது.

இவ்வாறான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு இந்தியாவினால் அழுத்தங்களை கொடுக்க முடியாது. இலங்கையின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பு என்றும் சுஜாத்தா சிங் குறிப்பிட்டுள்ளார்.

### "ஆவா"...

3 ஆள்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், ஆவா குழுவின் தலைவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விள்க்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (25)

### சிவராத்திரிக்கு...

ஊடாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவிடம் இந்து ஆலய பாதுகாப்பு பேரவை விடுத்த வேண்டுகோளையடுத்தே விடுமுறை வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தப் பேரவையின் ஒருங்கிணைப்புத் தலைவர் ராஜு பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

### பொலிஸ்...

ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்த வேளையில், அப்பகுதிக்கு வந்த சில இனந்தெரியாத நபர்கள் இவரை தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சுன்னாகம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### நூல்நிலைய...

ஆக்ரோஷமாகத் தாக்கியுள்ளார். இதனால் நிலை தடுமாறி நூலக உத்தியோகத்தர் கீழே விழுந்தார். இது தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் ஆளும் கூட்டமைப்பின் நகரசபைத் தலைவர் தேவசகாயம்பிள்ளையிடம் முறைப்பாடு செய்தார். அதற்கு நீதான் உறுப்பினரை அவமதித்துள்ளாய் எனக்கூறி குறித்த உத்தியோகத்தரை வேலையிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

அத்துடன் நீ பென்சனில் போவதுதான் நல்லது எனவும் ஆலோசனையும் கூறினாராம். எனது பணியிடத்திற்கு வந்து குறித்த உறுப்பினர் கிசோர் தாக்கியுள்ளார் என மீண்டும் எடுத்துக் கூறியபோது, நீ பென்சனில் போ என அதட்டியுள்ளாராம்.

சாவகச்சேரி நகரசபை அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. அதில் நூலக பரிசாரகர் பதவிக்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 2014.02.28 ஆகும்.

அதற்கு தங்களது குடும்ப உறவுகளை வேலையில் இணைத்துக் கொள்வதற்கு கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முண்டியடித்துக் கொண்டு தமது உள்வேலைகளை ஆரம்பித்து, இப்பொழுதே வெற்றிடங்கள் யார் யாருக்கென பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாம். வெற்றிடங்கள் போதாமையால் இவ்வாறு ஓய்வு நிலைக்கு 3,4 வருடங்கள் உள்ளவர்கள் கட்டாய ஓய்வுக்குச் செல்லுமாறு வற்புறுத்தப்படுவதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டிலுள்ள பல சபைகளில் கூட்டமைப்பு உறுப்பினர்களும் அவர்களது கையாட்களும் பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வலிகாமம் கிழக்கு பிரதேசசபைச் செயலாளர், 2014 வரவு செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்பட்ட போது கூட்டமைப்பினர் இரு கோஷ்டிகளாக செயற்பட்டதால் வரவு செலவுத் திட்டம் தோல்வி யடைந்தது.

கூட்டத்தை நெறிப்படுத்தியதற்காக அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு, அங்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டமைப்பின் உட்கட்சி கோஷ்டிப் பூசல்களால் நேர்மையான அதிகாரிகள், ஆதிக்கம் உள்ள கோஷ்டிகளால் பந்தாடப்படுகின்றனர்.

### சட்டம் ஒழுங்கை...

என்பதையும் தென்மராட்சியின் சில பகுதிகளில் சமூக சீர்கேடுகள் நடக்கின்றன. இதனையிட்டு இரவு நேரங்களில் பொலிஸாரை ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாறும் வல்லிபுரம் கோவிலடி குடத்தனைப் பகுதிகளில் இரவு வேளைகளில் சட்ட விரோதமாக சவுக்கு மரங்களை தறித்தும் மணல்களை அகழ்ந்தும் களவாக கொண்டு செல்கின்றனர்.

வலிகாமம் கிழக்கு பகுதியிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் மற்றும் தனியார் வகுப்புகள் விடப்படும் நேரங்களில் இளைஞர் குழுக்களின் செயற்பாடுகள் சமூக சீர்கேடுகளை உருவாக்குகின்றன.

இவற்றை செவிமடுத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் குடாநாட்டில் நிகழும் சமூக சீர்கேடுகளுக்கு துணைபோகும் ஆவா குழு, டில்லு குழு போன்ற குழுக்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் தமக்கு உடன் அறிவிக்குமாறு கூறியதுடன் சட்டத்தின் முன் சகலரும் சமன். சட்டம் தன் கடமையை செய்யும் என்றார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சரின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் (ஜெகன்) வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்), வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வடக்கின்...

அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் நோர்வே தூதுவர் கிறேசன் லோசன் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை அவரது மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு குறித்து அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் நோர்வே அரசாங்கத்தின் ஒருபகுதி நிதி மீள்குடியேற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து தூதுவர் தம்மிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் தெரிவித்த அரச அதிபர், யாழ். மாவட்டத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைவரம் குறித்தும் அவர் வினவியதாகவும், அதற்கு இம்முறை மழைவீழ்ச்சி குறைந்ததன் காரணத்தால் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் நோர்வே தூதுவரிடம் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான காண்பியம் ஒன்றை நோர்வே தூதுவருக்கு காண்பித்ததாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நோர்வே அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் திட்டங்களின் முன்னோடி நடவடிக்கையாக அவரது விஜயம் அமைந்திருந்ததாகவும் அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார். (பா,25)

# மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிகள்; கோரிக்கை கிடைப்பது குறைவு

## உதவித் திட்டங்கள் காத்திருக்கின்றன



யாழ்.மாவட்டத்தில் உள்ள விஷேட தேவையுடையோர் உதவி கோருவது குறைவாகக் காணப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் விஷேட தேவையுடையோருக்கான தேவைகள் தொடாபான செயலமர்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது, யாழ்.மாவட்டத்தில் உள்ள விஷேட தேவையுடையோரின் தேவைகள் நிறைவேற்றப்படுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. அதற்கு, விஷேட தேவையுடையோரின் விண்ணப்பபங்கள் மிகக்குறைவாக சமூக சேவைகள் அமைச்சுக்கு கிடைக்கின்றன. அதனால், அவற்றினை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, விஷேட தேவையுடையோருக்கான உதவித் திட்டங்கள் சமூக சேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பற்றிய தகவல் சம்பந்தப்பட்டோருக்கு தெரியாமல் இருக்கின்றன.

அதற்கான விழிப்புணர்வுகளை சமூக சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஏற்படுத்த வேண்டும். அந்தத் தகவல்களை உரிய முறையில் விஷேட தேவையுடையோருக்கு வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக கொண்டார்.

அதேவேளை, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரையாற்றுகையில், சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்படும் உதவித் திட்டங்களை வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள விஷேட தேவையுடையவர்கள் சரியான தகவல்களை பெற்றுக் கொள்வதில் தமதங்கள் ஏற்பட்டுள்ளன என நினைக்கின்றேன்.

அந்தவகையில், விஷேட தேவையுடையோருக்கு என வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் மேலும் விரிவுபடுத்த வேண்டுமென நினைக்கின்றேன் என்றார்.

அந்த வகையில், குறித்த செயலமர்வுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

(பா,25)

## வங்கி ஊழியர்களாக நியமனம்

(கொழும்பு)

மக்கள் வங்கிக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட 600 ஊழியர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வததேச மநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 ஊழியர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது கரங்களால் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

மேல் மாகாணம் மற்றும் தென் மகாணம் தவிர்ந்த ஏயை மாகாணங்களில் இருந்து தெரிவானவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி மற்றும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய ஆகியோர் உட்பட நாடாளுன்ற உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# தெற்கில் தேர்தல் முறைகேடு; இதுவரை 134 முறைப்பாடுகள்

மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 134 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

இவற்றில் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவிலான 37 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

காலி மாவட்டத்தில் 10 முறைப்பாடுகளும், மாத்தறை மாவட்டத்தில் 12 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவு தெரிவிக்கின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அரச வாகனங்களை சட்டவிரோதமாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றமை தொடர்பில் 12 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத்தவிர, அரச உத்தியோகத்தர்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியமை தொடர்பில் 11 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# இதுவரை 62 எலும்புக்கூடுகள் மன்னார் புதைகுழியில் மீட்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி 23 ஆவது தடவையாக நேற்று தோண்டப்பட்ட போது மேலும் ஒரு மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்திய ரெட்ன தலைமையில் நேற்றுக் காலை 8.30 மணிமுதல் மதியம் 2.30 மணிவரை குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது.

இதன்போதே மேலும் ஒரு மனித எலும்புக்கூடு அங்கிருந்து மீட்கப்பட்டது.

இத்துடன் இதுவரை மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் தொகை 62 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை ஏற்கனவே மீட்கப்பட்ட 4 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் நேற்று பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை மீட்கப்பட்டுள்ள 62 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களில் 39 [illegible]தே எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் எதிர்வரும் திங்கட் கிழமை 17 ஆம் திகதி 24 ஆவது தடவையாக குறித்த மனிதப் புதைகுழி மன்னார் நீதவான் முன்னிலையில் தோண் டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸ் மீது விமல் வீரவன்ச காட்டம்

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தயாரித்துள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, இலங்கைக்கு எதிரான தகவல்கள் வழங்கியவர்களில் அமைச்சு பதவியின் சிறப்புரிமைகளை அனுபவித்து வரும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சீதுவ லியனகஹாமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான யோசனை மீதான வாக்கெடுப்பு மார்ச் 28 ஆம் திகதி நடத்தப்படுவதால், அரசாங்கம் மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தலை 29 ஆம் திகதி நடத்துவதாக சர்வதேசத்திற்கு துதிப்படும் எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஜெனிவா வாக்கெடுப்பை காட்டி தேர்தலில் வெல்ல அரசாங்கம் முயற்சிப்பதாக இவர்கள் கூறுகின்றன.

அவர்கள் கூறுவது பொய்யான கதை. மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றது. அப்போது எந்த ஜெனிவா வாக்கெடுப்பு நடந்தது?.

அரசாங்கம் மூன்றில் இரண்டு பெருபான்மை பலத்தில் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றது. ஜெனிவாவில் வாக்கெடுப்பு நடந்தாலும் நடக்காது போனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறும் வெற்றியை நிறுத்த எந்த ஜாம்பவானும் நாட்டில் இல்லை.

எனினும் இம்முறை ஜெனிவா வாக்கெடுப்பும், மேல், தென் மாகாணங்களின் தேர்தலும் அடுத்தடுத்து வருவதால், தேசத்தின் மன உறுதியையும், நாட்டின் ஐக்கியத்தை எதிரான சக்திகளுக்கு காண்பிக்கும் சிறப்புமிக்க சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைத்துள்ளது என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

## புலிகளுக்கு ஆயுதம் விநியோகித்தவர் அமெரிக்க நீதிமன்றில் மன்னிப்புக் கோரினார்

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்தவர், அமெரிக்க நீதவானிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட கனேடியர் ஒருவரே இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு ஏவுகணைகள், துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை விநியோகம் செய்த பிரதீபன் என்ற இலங்கையர், அமெரிக்க நீதவானிடம் கடிதம் மூலம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

பிரதீபன் கனடாவின் ஒன்டாரியோவின் பிரம்டன் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தடை செய்யப்பட்ட இயக்கமொன்றுக்கு ஆயுத விநியோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில், பிரதீபனுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகளில் பிரதீபன் குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

# வலி. கிழக்கின் வரவு செலவுத் திட்டம் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது

## செயலாளருக்கு திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் செயலாளர் திருமதி ஜெயந்த சோமராஜினால் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமாரினால் இம்முறை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டதனால் தவிசாளர் பதவியிழந்தார். இதனால் சபையின் செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்த நிலையில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 7 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலூடாக வரவு-செலவுத் திட்டத்தை அனுமதிக்கும் பொறுப்பினை செயலாளருக்கு வழங்கியிருந்தார்.

இதன் பிரகாரம் செயலாளர் திருமதி ஜெயந்த சோமராஜ் வரவு-செலவுத் திட்டத்தை திருத்தம் செய்து அனுமதித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியதுடன் கணக்காய்வு திணைக்களம் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு பிரதிகளும் அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, இதுவரை செயலாளராக கடமையாற்றி வந்த திருமதி ஜெயந்தா சோமராஜின் பதவியை நீக்கிவிட்டு முகாமைத்துவ உதவியாளர் தரம் II இல் உள்ள ந.குமணனை புதிய செயலாளராக நியமித்துள்ளனர்.

அத்துடன் முன்னாள் தவிசாளரிடமிருந்து வாகனம் உட்பட சபைச் சொத்துக்கள் எவையும் இதுவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும், உபத[illegible]சாளர் மற்றும் உறுப்பினர்கள் கூட்டம் கூடவோ, சபைச் செயற்பாடுகளில் ஈடுபடவோ வடமாகாண சபையினால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை எனவும் உறுப்பினர்களும், பிரதேச பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

## யுத்தக் குற்ற விசாரணையை திணிக்க சர்வதேச சமூகம் முயற்சி

### அமைச்சர் ஹெகலிய குற்றச்சாட்டு

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணையைத் திணிப்பதற்காக சில சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ள முடியாத் ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டுவருவதாகத் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல குற்றஞ்சாட்டினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று பிற்பகல் இச்சந்திப்பு நடைபெற்றது. இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை கொண்டுவந்து இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்க சில சக்திகள் பகீரதப் பிரயத்னம் மேற்கொண்டுவருகின்றன.

தெளிவற்ற ஒரு அடிப்படையில் அந்த நாடுகள் இயங்குகின்றன. நாளுக்கு நாள் அவர்களின் நிலைமை மாற்றமடைகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் 75 சதவீதத்தை நாம் நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஏனையவற்றை நடைமுறைப்படுத்த அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். வடக்கிலும் தெற்கிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு மக்களின் பொருளாதாரம் வலுவான நிலையில் உள்ளது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் இன்று நாட்டின் பாதுகாப்பு படையில் இணைக்கப்பட்டுள்ளனர் எனத்தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.